சிவமயம்.

உபயகதிர்காம நாதன்றுணை.

# கருவூர் மான்மியம்.

ஆரணிநகர சம்ஸ்தான வித்துவானும்,
அத்துவித சித்தாந்த மதோத்தாரணரும், மதுரைத்
தமிழ்ச் சங்கப் புலவரும், சென்னை இராசாங்கத்தாராலும்
மாயாவாத தும்சகோளரி என்று உறுதிப்படுத்தப் பெற்றவரும் ஆகிய,

யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி

மகா வித்வான்

நா திரைவேற் பிள்ளை அவர்கள்

இயற்றியது.

சென்னை:

பிரசிடென்சி அச்சியந்திர சாலையிற்
பதிப்பித்தது.

பராபவ௵ ஆனி௴ ௨௯௳.

1906.

*Registered Copy Right.*

# பொருள் அட்டவணை.


| எ. | விஷயம். | பக்கம். |
| --- | --- | --- |
| க. | நாந்தியுரை ... ... ... ... | சு. |
| உ. | கடவுள் வணக்கம் ... ... ... ... | க. |
| ங. | கருவூர்த் தல விவரம் ... ... ... ... | ரு. |
| ச. | மான்மிய வரலாறு ... ... ... ... | ,, |
| ரு. | திருத்தலப் பெயர்களுங் காரணமும் ... ... | சு. |
| . | திருத்தலத்தின் எல்லை ... ... ... ... | அ. |
| எ. | திருத்தல விசேடம் ... ... ... ... | ,, |
| அ. | தீர்த்த விளக்கம் ... ... ... ... | கூ. |
| கூ. | அறுவகை மங்கலங்கள் ... ... ... ... | கக. |
| ௰. | மூர்த்தி விசேடம் ... ... ... ... | கஉ. |
| கக. | பசுபதீசப் பெயர் விளக்கம ... | ,, |
| கஉ. | வஞ்சுளேசப் பெயர் விளக்கம் ... ... ... | கசு. |
| கங. | காமதேனு பூசித்தது ... ... ... ... | கஎ. |
| கச. | அலங்காரவதி யம்மையார் அருச்சித்தது ... ... | ,, |
| கரு. | பிரமன் பூசித்தது ... ... ... ... | கஅ. |
| கசு. | வியாசர் வழிபட்டது ... ... ... | ,, |
| கஎ. | திக்குப் பாலகர் சேவித்தது ... ... ... | ,, |
| கஅ. | அமரர் முதலானோர் அருச்சித்தது ... ... ... | ககூ. |
| ககூ. | சுக்கிரன் துதித்து நோற்றது ... ... ... | ,, |
| உ0. | முசுகுந்தன் முதன்மை பெற்றது ... ... ... | ,, |
| உக. | காலவமுனிவர் கதித்த பூசனை ... ... ... | உ0. |
| உஉ. | விபண்டக வேடன் விழைவினுய்ந்தது ... ... | ,, |
| உங. | கோபிதாரத் துவசன் குட்டநோய் நீங்கியது ... ... | உக. |
| உச. | எறிபத்த நாயனர் இணையடி பெற்றது ... ... | ,, |
| உரு. | புகழ்ச்சோழ நாயனர் முத்தி புக்கமை ... ... | உஉ. |
| உசு. | கருவூர்த் தேவர் கதிபெற்றது ... ... ... | ,, |
| உஎ. | நாரசிங்க புராண சரிதம் ... ... ... ... | உச. |
| உஅ. | நூற்பயன் ... ... ... ... | உசு. |
| உகூ. | பசுபதி நாம வேதபாத ஸ்தோத்திரம் ... ... | ,, |
| ங0. | ஷை கலாஸ்துதி ... ... ... ... | உஅ. |
| ஙக. | திருவானிலைத் தேவாரத் திருப்பதிகம் ... ... | உகூ. |
| ஙஉ. | பசுபதித்திருவிருத்தம் (திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்) | ஙக. |
| ஙங. | ,, திருவாசக திருவிசைப் பாக்கள் ... ... | ஙஉ. |
| ஙச. | ,, பெரிய புராணத்துதி ... ... ... | ,, |
| ஙரு. | திருத் தொண்டத் தொகை ... ... ... | ஙங. |
| ஙசு. | திருத்தொண்டர் திருவந்தாதி ... ... ... | ,, |
| ஙஎ. | திருத்தொண்டர் புராணசாரம் ... ... ... | ,, |
| ஙஅ. | கருவூர்ப் புராண தோத்திரம் ... ... ... | ஙச. |
| ஙகூ. | இத்தலத்தின் மகோற்சவ விவரம் ... ... ... | ஙஎ. |
| ச0. | திருக்கோயிலினுந் திருவீதியினுஞ் செய்யத்தகாத குற்றங்கள் | ஙஅ. |
| சக. | தீர்த்தங்களிற் செய்யத்தகாதன ... ... ... | ,, |
| சஉ. | அடியார்கள் திருநட்சத்திரம் ... ... ... | ஙகூ. |
| சங. | மகாகும்பாபிடேகச் சிறப்பு ... ... ... | ,, |

௳

சிவமயம்.

# நாந்தியுரை.

"திலேஷுதைலம் ததிநீவசர்ப்பிராபஸ்ரோத" என யசுர்வேதங் கூ
யவாறு அநாதிமலமுத்த பதியாகிய சிவபெருமான் எள்ளி லெண்ணெய்போ
எங்கணும் வியாபித்து நிற்பினும், சிவனடியார் திருவே...
லியவற்றிலன்... ...தும், சிவாலய முத
...லிங்கமுதலிய திருவுருவங்களி னிடத்துந் தயிரினெய்
போல வெளிப்பட்டு நின்று அருள்புரிவார். ஆதலாற் சிவனடியார் திருவேடங்
களையும், சிவாலயத்தையுஞ் சிவபெருமானாகவே யெண்ணி வழிபடுகவென்று

ஈசுவெஷு வராவஸத ஷெஷாம் ஹஜெஷம் ஶிவாயய:
என இரௌரவாகமப் பாசவிமோசன படலத்தும், "செம்மலர் நோன்று
ள் சேரலொட்டா - வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ - மாலற நேய மலி
தவர் வேடமு - மாலயந் தானு மரனெனத் தொழுமே" எனச் சிவஞான
போதத்துங் கூறப்பட்டன. அவற்றுட் சிவாலய வழிபாடு முக்கியமா மெ
னதைத் தெய்வப் புலமை ஔவைப் பிராட்டியாரும் "ஆலயந் தொழுவது
சாலவு நன்று" எனவும், "கோயிலில்லாவூரிற் குடியிருக்கவேண்டாம்" என
வும் உரைத்து நன்கு விளக்கி யருளினர். இங்ஙன மாகவும் "இத்தகைய
ஆலயவழிபாடுமுதலியன வேதாந்தங்களிற் கூறப்படவில்லை யாகலி னவை
வேண்டப்படா. அவையெல்லாம் பார மார்த்திகத்திற் பொய்"யெனக்கூறி
யிடர்ப்படுவர் சிலர். அங்ஙனங்கூறுவோ ருண்மையில் வேதாந்திகளல்லர்
வேதாந்தந் தெரிந்தவரு மல்லர் என்றே யொதுக்க வேண்டியது. என்னை?

"ஶிவாயதஸ ஈகூவம் ஶதகூவம்" எனப் பிருகச் சாபாலச் சுரு
தியும், "லிங்கராவிணம் ஈரஸ் ஸவைஜ்யவிஷயந்தி" எனவும், ஈர
வஷெவாஸ்துதாஸ்தாதிர்யாநாக்ஷிணாயாம்ஷிஶிஈஷ்டிஸாநம்தநாஷ்
ஈடிவ ஸம்ஜ்ஞிதம்" எனவும் அதர்வண வேதமுங் கூறியவாற்றானே சிவா
லயம், இலிங்கம், மண்டபம், அவற்றின் வழிபாடு என்பன பெறப்பட்டமை
யறிந்து வழிபட்டுய்க. அன்றியும் வாசசநேய சங்கிதோப நிடதத்திலே
"கூந்யெஷவாஹவிஷ்யாஉந்யெஷவாஹவிஷ்யா" எனவரூஉ
பத்தாமந்திரங்களானே இருவகைவழிபாடுங் கூறப்பட்டமை தெளிக.

இன்னும் அதர்வணவேதப் பிருகச் சாபால சாகையிற் பஞ்சம
பிராக்மணத்திலே "விபூதி யில்லாத நெற்றியைக் கொளுத்துக. சிவால
மில்லாத கிராமத்தை யொழித்துவிடுக. சிவார்ச்சனை யில்லாத வுடலை யெரி

கக. சிவபெருமானை யாசிரயிக்காத சாஸ்திரங்களைத் தீயிடுகஎன்று "யிதூ
ஶ ஹிதம் ஹாஸம் யிஷூரா3 உஶிவாஶயம்:யிமநீஶாவகூநம் ஜநயிஷூ
ாஉஶிவாஶ்ரயாம்" எனக்கூறிநன்கு விளக்கிற்று. இவ்வுண்மையையே
ராவிடவேதத் திருவநட்பாவும் "திருக்கோயிலில்லாத திருவிலூருந் திரு
வண்ணீறணியாத திருவிலூரும் - பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
அவையெல்லா மூரல்ல வடவிகாடே" எனவும், "திருநாம மஞ்செழுத்
ஞ் செப்பாராகிற் றீவண்ணர் திறமொருகாற் பேசாராகி-லொருகாலுந்திருக்
ாயில் சூழாராகி லுண்பதன் முன் மலர்பறித்திட் டுண்ணாராகி-லருநோய்கள்
டவெண்ணீறணியாராகி லளியற்றார் பிறந்தவாறேதோ வென்னிற் - பெரு
ாய்கண் மிகநலியப் பேர்த்துஞ் செத்தும் பிறப்பதற்கே யாளாகி யிறக்
ாருரே" என்று கூறி வற்புறுத்தலின் அதனைவேண்டாம் என்று நிந்திப்
கூற்று அவலப்பட்டதென்க. சிவாலய வழிபாடு முத்தி சாதனமாகா
ன்பவர் புலையரென்றும் அவரையணுகினும் பெரும்பாவமென்றும் முள்
செடிக்கும் முத்தியருளிய உமாபதி சிவாசாரிய சுவாமிகள் "உற்ற திரு
ஞ் சிவாலயமு முள்ளத்துச்-செற்ற புலையர்பாற் செல்லாதே" என நெஞ்சு
தூதின்கண் அருளியுள்ளார்.

முத்திசாதனமாகிய சிவாலய வழிபாடுஞ் சிவாலய மிருந்தாற்றான் செ
வியலும். இல்லையேல் முடியாதாம். ஆதலாற் சிவாலயத்தைப் புதுக்கு
தைப் பார்க்கினும் புண்ணியம் பிறிதொன்றில்லை. இத்தகைய சிவாலய
ளிவையிவையென்று தேவார முதலாகப் பெரியபுராண மீறாகவுள்ள பன்
திரு முறைகளானும் மங்களாசாசனஞ்செய்யப் பெற்றுவிளங்குகின்றன.
வகளுள் இக்கொங்கு நாட்டிலே யுள்ள திருப்பாடல்கள் பெற்ற தலங்கள்
அவையாவன (க) திருப்புக்கொளியூ ரவிநாசி (உ) திருமுருகன் பூண்டி
திருநணா என்னும் பவானிகூடல் (ச) கொடிமாடச் செங்குன்றூர் என்
திருச் செங்கோடு (ரு) வெஞ்சமாக் கூடல் (சு) திருப்பாண்டிக் கொடு
. (எ) திருக்கருவூர் என்பனவாம்.

இவ்வெழுவகைத் தலங்களினுஞ் சிறந்த இத்திருக்கருவூர்த் திருவானிலை
னுஞ் சீரிய சிவாலயங் கிலமடைந்தமைநோக்கி, சிவாலய ஜீர்ணோத்
ன மகாசிவ புண்ணியத்தையே செய்து விளங்கும் நகரப் பிரபுக்கள்
லக்கக் கணக்கான பொருள்களைச் செலவிட்டுத் திருப்பணி முற்றி
கும்பாபிஷேகம் நடத்து மிந்நாளில், இத்தகைய தருமமெல்லாஞ் செய்
சிவாலய வழிபாட்டிற்காகலால், அதன்பெருமைகளை யறிந்தோர் சாலவு
வைத்து வழிபட்டு உய்வாரென்னுங் கருத்துநோக்கி, இத்தலமான்மிய
விரிக்குந் தலபுராண மிருப்பினும் அது கற்றவர்க்கே பயன்படலால்,
யோர்க்கும் பயன்படுமாறும் வேதசிவாகமாதிபிரமாணங்களுடன் ஒரு
யெந்தருக வென்று நகரப்பிரபு ஸ்ரீமந் சா - ரா - ம - மு. அண்ணாமலைச்

செட்டியார் அவர்கள் விரும்பியப்படி இந்நூலையியற்றி, இத்தலத்தின்கண் ...
ரதும் அவர்தஞ் சகோதரப் பிரபுக்களதும் பெருமுயற்சிகளானும் எவரு...
வியந்து கொண்டாடும்படி யினிது நிகழ்ந்து முற்றிய இத்திருநாளாம் ம...
கும்பாபிடேக தினத்தில், திருவானிலைத் திருச்சந்நிதானத்தில் அரங்கேற்...
வெளியிட்டேம். இன்னு மிதற்குவேண்டிய விஷயங்களையும் பலப்பல நூ...
களினின்றுந் தொகுத்துளேம். இத்தல மான்மியம் பிரம கைவர்த்த பு...
ணத்திலுள்ளது. அதன்கண் ஆம்பிரவதி மாகாத்மியம் “ஐதிஹ்ய ஹெ...
த்லோகே மஹா வாரணே ஶிவக்ஷேத்ர வர்ணே உபரிஹா...
ஆம்ரவதீ மாஹாத்ம்யம் நாமாஷ்டாதிக ஶததமோத்யாயঃ” என்...
கூறலால், கoஅ - ம் அத்தியாயத்தும், பிரமதீர்த்த மாசாத்மியம் ககக - ம் ...
தியாயத்தும், கர்ப்பபுரி மாகாத்மியம் கoகூ, ககஉ - ம் அத்தியாயங்களி...
கூறப்பட்டுள்ளன. அவற்றையும் கருவூர்ப் புராணத்தையும், நகரவணி...
பிரபுவும், வித்தியா விநோதருமாகிய ஸ்ரீமங் சா - ரா - ம - மு. இராமசா...
செட்டியார் அவர்கள் இயற்றிய இத்தல வெண்பா நூலையுங் கண்ணு...
னேம். பெரும்பாலும் வடமொழி மாகாத்மிய முதலிய நூல்களின் சாரம...
இது தொகுத்தனம். இத்திருக்கோயிற் திருப்பணிகளை யினிது முற்றுவித்...
மகாகும்பாபிடேகஞ் செய்வித்த சிவபுண்ணியச் செல்வர்களான நகரப...
புக்கள் யாவரும் நீடூழி வாழ்கவென்த் திருவருளைச் சிந்திக்கின்றேம்.

இந்நூல் கும்பாபிடேக தினத்தில் வெளியிடற்பொருட்டுச் சிரத்...
யுடன் முயற்சிபுரிந்த சிவநேயச்செல்வர் கோமளேசுரன்பேட்டை நாக...
முதலிவீதி 17 - வது எண்ணுள்ள வீட்டில் இருக்கும் ம-ா-ா-ஸ்ரீ மு. ந...
ஆசாரியார் அவர்களின் நன்றி பாராட்டத்தக்கதே. அன்பர்கள் யாவரும் ...
நூலைப் பெற்றுப் பசுபதீசுரப் பெருமானது மகிமைகளையுணர்ந்து வழிப...
இகபரசாதனங்களை யடைந்துய்க வென்று திருவருளைச் சிந்திக்கின்றேம்.

இங்ஙனம்,

நா. கதிரைவேற்பிள்ளை,

பச்சிம புலவகானநகரம்,

யாழ்ப்பா...

—:o:—

உ

சிவமயம்.

ஓம் பசுபதீச்வராயநம:.

# கருவூர் மான்மியம்.

## விநாயகர் காப்பு.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கருவூரு முகிறருக்க ளவையூரு மலையூர்ந்து கதித்த வாரி
மருவூரும் பொழிலூருள் வயலூருங் கருவூரின் மகிமை பேசத்
திருவூரு மவ்வூரிற் கருவூரு முயிரூருந் தீமை மாற்றிச்
சருவூரி னிருத்தவல்ல துதியூருங் கரத்தனடி தரித்து வாழ்வாம்.

---

## கடவுள் வணக்கம்.

பசுபதீசுரப் பெருமான்.

தலையளவு வண்ணகப் பெருந் தேவபாணி.

இவை எட்டடித்தரவு.

மணிவிளங்கு தென்றிசைக்கண் மாமலரா னேற்றிருப்பப்
பணிதயங்கு வளைப்படையும் பானிறத்த சுரிசங்கு
மிருசுடர்போ லிருகரத்து மேந்தியமர் மாயோனும்
வருகுணக்கின் வேட்டமர மாநிலத்திற் றிருக்கருவூர்த்
தண்ணகரி லானிலைக்கட் டணவாதிங் குலகீன்ற
பண்ணிசைபோற் பாவையவள் பங்குறைய வொளிவடிவின்
வீற்றிருந்து மன்னுயிர்க்கு மேலாந்தண் ணருள்பொழிய
ஆற்றிருக்கும் பசுபதிப்பே ரொருமுதனீ கேட்டருள்க.

இவை நான்கடித் தாழிசை மூன்று.

எவ்வுயிர்க்கு முயிரேயா யியங்குதனின் றொழிலாகி
யவ்வுயிர்க்க ணடங்கியே யகலாது நிற்றலினால்
வெவ்வினைசெய் தவையிழந்து வெம்பிறவிக் கடல்சூழ்ந்த
வல்வினையை யகற்றும னிற்பதுநின் னருளன்றே;

பல்லுயிரும் படைப்பதுநின் பண்பன்றே யாணவத்தான்
வல்வினையின் வலைப்படீஇ வருத்தங்கூ ருயிர்தம்மை
நல்வினையே பயில்வித்து நடுக்கஞ்செய் தவைதுமீஇ
யல்லல்வா யழுந்தாம லகற்றலுநி னருளன்றே;
அழிப்பதுநின் றொழிலன்றே யலுப்பொழிக்க வுயிரெல்லா
மொழித்தவற்று ளுணர்வுகளை யொருவாம லுடனிறுத்திப்
பழிப்பின்றிப் பல்காலு மிப்பரிசே பயிற்றுதலி
னழிப்பதுவு மில்லையா லாங்கதுநின் னருளன்றே.

இவை யீரடி யிரண்டு.

மந்திர முறைத்து வரன்முறை பூசைசெய் - பந்தமி லந்தணர் சிந்தை யாயினை.
வினையி னீங்கி விழுத்தவ முஞற்று - முனிவர் தமக்கு முத்தி யாயினை.

இவை யோரடி யெட்டு.

இலனென விதந்தோர்க் கில்லையு மாயினை.
யுளனென வுணர்ந்தோர்க் குண்மையு மாயினை.
அருவுரு வென்பார்க் கவையு மாயினை.
பொருவற விளங்கிய போத மாயினை.
உத்தம முத்தையன் பத்தியி னோங்கினை.
நித்தமு மவன்பணி வித்தக வுவந்தனை.
யத்தமு மவன்மகார் சித்தமு நின்றனை
துத்தியஞ் செய்பவர் புத்தமிர் தாயினை.

இவை யிருசீ ரெட்டு.

பானிற வண்ணனீ பசுபதிக் கடவுணீ.
நீனிற வுருவனீ நிலையுள் கடவுணீ.
அறுமுக வொருவனீ யானிழற் குருவுநீ
பெறுதிரு வுருவுநீ பெட்பன வுருவுநீ.

இவை யொருசீர் பதினாறு.

மண்ணுநீ விண்ணுநீ - மலையுநீ கடலுநீ.
எண்ணுநீ யெழுத்துநீ - இரவுநீ பகலுநீ.
பண்ணுநீ பாவுநீ - பாட்டுநீ தொடருநீ.
அண்ணனீ யமலநீ - அருளுநீ பொருளுநீ.

ஆங்க, தனிச்சொல்.

இது ஆசிரியச் சுரிதகம்.

இனியை யாகிய விறைவநின் னடியிணை
சென்னியின் வாங்கிப் பன்னாட் பரவுது
மலர்தலை யுலகின் மன்னுயிர்க் கெல்லா
நிலவிய திருவருட் புரிதல் வேண்டிக்

கொங்குநா டதற்கட் குலவுசீர் கருப்பத்
துங்கநற் புரியினர் வாடா வஞ்சி
பாற்கர புரமெனப் பல்பெய ருறீஇத்
தோற்கருஞ் சீர்த்திக ளுதைந்தவிக் கருவூர்த்
திருவா னிலையெனுஞ் செம்பொற் சினகர
மொருவா திருந்தரு ளுறுத்திய வுற்றோர்
செற்றமொ டளைந்த பற்றெலாந் துமித்துப்
புற்றினின் முளைத்தநின் பொன்னடித் துணைவை
யுரிமையை யுடையை யாகலி
னிருமை யின்பமு மெளிதினிற் பெறவே.

---

## சௌந்தர நாயகி யம்மையார்.

### வெண்பாவினுன் முடியுங் கொச்சக் வொருபோதுத் தேவபாணி.

குயிறுளைத்துப் புறப்படூஉங் குளிர்மதியும் பரிதியும்போல்
வியன்குளிறு வலம்புரியும் விரிவளையு மொளிசிறப்ப
வானிட்ட வில்லேபோற் பன்மணியா ரங்கதிர்ப்பக்
கானின்று கனல்கின்ற கதிர்க்குயமேற் கவின்செய்ய
வம்மேகத் திடைப்பிறந்த நசையுருமே றதிசயிப்ப
மைம்மேனி மருங்கதிர நகத்தரியே வால்புடைப்ப
விண்டோயு மதிணீல வெற்பிடைவேய் மிடைந்தாங்கொ
ரெண்டோளு மிடுநீழ லிளங்கதிர் களிகூரப்
பதியெல்லாம் வென்றுயர்ந்த பைங்கருவூ ரெனும்வஞ்சிப்
பதியெல்லாங் கொடுபுரப்பப் பகரரிய சௌந்தரப்பேர்
தாங்கியவந் தருளுருவை தனியடியோ மொருபழிச்சுக்
கோங்கியநின் னரும்புணரி யுனியுன்னி வாழ்த்துகமே
மைதொடுத்த கடற்புறஞ்சூழ் மலையுறழ மணியனாக்கட்
கொய்துடுத்த வரித்துகிலின் கொழுஞ்சோதி கொழுந்தோட்ட
நீனின்ற படிவத்தா னெடியோனை முதற்பயந்த
தாயென்று நான்மறை சாற்றினும்
யாயென் றல்ல தியாந்துணி யேமே.

---

## வழிபடு கடவுள்.

### எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தக்கிண கயிலை யென்றுரை யிலங்கைத் தலத்தில்யாழ்ப் பாணத்தி னொருசார்
நக்கினர் பொதுளும் பொழில்சுலாந் திருவி னயக்குமேற் புலோலிநன் னகரிற்
றிக்கினைந் தோங்கும் புகழ்பெறும் புதுச்சந் நிதித்திருக் கோயிலிற் றினமும்
விக்கின மகற்றி நங்களுக் கருளும் வேன்முரு கிறைபதம் பணிவாம்.

## பன்னிரு திருமுறைத் திருவருட்பாக்காரர்.

[illegible]

ஸ்ரீகைலாஸ சிகராவாஸஸ்ய அகண்ட சித்காநாநந்தஸ்வரூபஸ்ய, வாசாம கோசராத்வைத ஓங்கார நிலயஸ்ய, நிரதிசய சௌந்தர்ய பரம மங்களோ மார்த்த விக்ரகஸ்ய, வரதசிவ மகாருத்ரஸ்ய மகாதேவஸ்ய ப்ரஸாதேந, ஸர்வ ஜந்தூநாம் கைவல்ய பதப்பிராப்தயே த்ராவிட திவ்ய சூக்திபிஃ, ஸகலவேத பரமதத்வ ரகஸ்ய சிவாகமசார தேவாராதி மஹாபுராணாந்த த்வாதச காருண்ய திவ்யகோச ப்ரணேத்ரூந் ப்ரஹ்மபுர ஸமுத்பூத ஸ்ரீஜ்ஞாந சம்பந்த ப்ரப்ரூதீந் பர்வதபுரஜாத ஸ்ரீகாருண்ய வாசக தேவாந்தாந் சிவஜ்ஞாநதீப மஹாமுநீந்திர சைவ சித்தாந்த சிகாமணீந் நமஸ்கரோமி.

---

## எறிபத்த நாயனார்.

எறிபத்த நாயனார்க்கும், கருவூர்க்கும், ஆம்பிரவதிநதிக்கும்,
சிவபெருமானுக்கும், விநாயகக்கடவுளுக்குஞ் சிலேடை.

ஐம்பொருட் சிலேடை யின்னிசை வெண்பா.

பரசு கொளலாற் பவானியிடமார்ந்து
விரவுநலி தீர்த்தலர்ன் மேற்பணியால் *வஞ்சி
யறியத்தம் பத்தத்த னாறுமுனே னன்ன
வெறிபத்தன் றாள்பணிவோமே.

கடவுள்வணக்கம் முற்றிற்று.

---

* சேரர்களுடைய இராசதானியாகிய வஞ்சி யென்பது கொடுங்கோளூ ரென்பார் சிலரும், திருவஞ்சைக்களமென்பார் சிலருமாக முரணுநிற்பர். அவ்வுரைகள் பொருந்தா. என்னை? சிலப்பதிகாரம், கருவூர்ப்புராணம், பதிற்றுப்பத்து, கொங்குவேண்மாக் காதைமுதலிய நூல்களான் இக்கருவூரே யஃதென்பதூஉம், வஞ்சிவனம் வஞ்சுளாரணியம் வஞ்சுளேசர் என்னு மிப்பெயர்களின்று மிருக்கக் காண்டலானே, கொச்சியைச் சார்ந்த வவ்வூர்களல்ல வென்பதூஉம் போதரல் காண்க.

## க.—கருவூர்த் தல விவரம்.

கருவூர் என்பது கொங்குநாட்டிலேயுள்ள சிவதலங்கள் ஏழனுளொன்று. திருஞான சம்பந்த சுவாமிகளின் றேவாரத் திருப்பதிகம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டு மூவேந்தரென்பாருட் சேரமன்னர் பலர்க்கும் இருப்பிடமாயுள்ளது. அதனாலே சேர ராசதானி யென்றுஞ் சொல்லப்படும். வில்லவன் கோதை யென்னுஞ் சிறப்புப்பெயருடைய சேரமந்திரிகளு மிருந்தவூரிதுவே. கடைச்சங்கத்தி லரங்கேற்றப்பட்ட ஐவகைப் பெருங்காப்பியங்களுளொன்றாய சிலப்பதிகாரத்தைச் செய்த இளங்கோவடிகள் என்னுஞ் சேரமன்னரு மிவ்வூரவரே. சிலப்பதிகாரத்திலே யிவ்வூர்க்கணும் புறங்களினு நிகழ்ந்த சரிதங்களையெல்லாம் "வஞ்சிக் காண்டம்" என்று அமைத்து உரைத்தனர். அதன்கண் இவ்வூரைப் "பூவாவஞ்சி, வாடாவஞ்சி" எனப் புகழ்ப்பட்டது. தெய்வப் புலமை ஒளவையார்க்கு அமிழ்தமுள்ள மலையிடைவிளைந்த கருநெல்லியங் கனியைக்கொடுத்த அதிகமானெடுமான் வஞ்சி என்னும் அரசன் பிறந்தது மிவ்வூரேயாம்.

கடைச்சங்கப்புலவராயிருந்து கவியரங்கேற்றிய கோவூர்க்கிழார், கருவூர்க்கிழார் என்பாரு மிவ்வூரவரே. தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சிறந்ததோ ருரைகண்ட ஆசிரியர் சேனாவரையர் முதலான புலவர்களு மிவ்வூர்ப்பிறந்தவரே. செந்தமிழ் கொடுந்தமிழ் என்னு மிருவகைத்தமிழ்களுட் செந்தமிழ்க்கு ஓரெல்லையாய்நிற்பதும் இக்கருவூரே. எங்ஙனமெனிற் றொல்காப்பியச் சொல்லதிகாரத்திலே "அவற்றுள் - இயற்சொற் றாமே" என்னுஞ் சூத்திரத்தில் உரையாசிரியர் "செந்தமிழ் நிலமாவன - வைகையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாம்" என்று உரைத்துளார். இதனாலே யிவ்வூர் சேர்தமிழ் நாடென்பதூஉம், இதற்கு மேற்கேயுள்ளன கொடுந்தமிழ் நாடென்பதூஉம் பெறப்பட்டன. இன்னு மிவைபோலும் விசேடங்கள் பல, கொங்கு வேண்மாக்காதை, தகடூர் யாத்திரை முதலிய நூல்களிற் பரக்கக் காண்க.

---

## உ.—மான்மிய வரலாறு.

இன்னன சிறப்புக்களையுடைய கருவூரின் பெருமைகளெல்லாம் பிரமாண்டபுராணம், பவிடியபுராணம், பிரமகைவர்த்தபுராணம், நாரசிங்கபுராணம், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், புறப்பொருட் பன்னிருபடலம், புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, பெரியபுராணம், அகத்திய பக்தவிலாசம், உபமன்னியு பக்தவிலாசம், திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணசாரம், தேவாரத் திருவருட்பா முதலிய நூல்களிலே கூறப்பட்டுள்ளன. ஈண்டுக் கூறப்படும் மான்மியம் பெரும்பாலும்

பதினெண் புராணங்களு ளொன்றாய * பிரம்மகைவர்த்த மகாபுராணத்திலே சிவக்ஷேத்திர காண்டத்திலே நூற்றெட்டாம் அத்தியாயந்தொடங்கிக் கூறப்பட்ட மகிமைகளேயாம்.

புரா கைலாஸ ஶிகரே ஸர்வ தேவநமஸ்க்ருதே।
ஸர்வர்த்திமணிஸங்கீர்ணே ஹ்ருத்யஸௌரோமண ஸேவிதே।

எனத் தொடங்கி,

மஹேஶ்வர ப்ராம்வசோ ஹாக்ருத்யம் க்ருதயாவக்ஷ்யேஹம்।
ஶ்ரவம்ஸநக் குமாரேணவ்யாஸஶிஷ்ய: வாவதீவதி:।
நந்திகேஶ உவாசேதிகவம் வக்ஷ்யேஶுகாராதிரம்।
தஸ்மாஸநக் குமாராய உநீந்த்ராயஹாத்மநே।

எனவரும் பிரமகைவர்த்த மகாபுராணச்சுலோகங்களின்படி.

அவற்றை முன்னர்க்காலத்திற் சிவபெருமான் திருநந்திதேவருக்கும், அவர் பிரமபுத்திரரான சனற்குமார மகாமுனிவர்க்கும் அவர் வியாசருக்கும், அவர் சூதமுனிவரென்னும் உரோம கருடண ரென்பார்க்கும், அவர் நைமிசாரண்ய முனிவர்க்கும் உரைத்தனர். அதனைச் சுத்தாத்துவித சைவசித்தாந்த ஆசாரியராகிய மெய்கண்டதேவ நாயனாரின் சந்தான பரம்பரையில்வந்தவோர் புலவசிகாமணி "கருவூர்ப்புராணம்" எனச் செந்தமிழிலே மொழிபெயர்த்துச் செய்தனர். அதனையும் வடமொழிப் புராணத்தையும் ஒத்து அவற்றினுள்ளவற்றை யெழுதியதன்றி, இன்னும் இத்தலவிடயங்களைப்பற்றி யறிய வேண்டிய இன்றியமையாதவைகளும் பற்பல நூல்களினின்றுந் தொகுத்து எழுதப்பட்டிருக்கின்றன.

---

## ௩.—திருத்தலப் பெயர்களுங் காரணமும்.

கருவூர், கற்பபுரி, கோவூர், ஆனூர், பாற்கரபுரம், சண்மங்கல க்ஷேத்திரம், ஆதிமாபுரம், கரபுரம், வீரசோழபுரம், வஞ்சுளாரணியம், வஞ்சிவனம், வஞ்சி, பூவா வஞ்சி, வாடா வஞ்சி, தாயூர், முசுகுந்த நகரம், கடம்பெறிந்தான்பதி, பிரமபுரம் என்பன இத்திருத்தலத்தின் திருப்பெயர்களாம்.

(க) மகாப் பிரளயகாலத்திலே ஒடுங்குஞ் சராசரப்பொருள்களெல்லாவற்றையுந் தன்னிடத்திலே கருப்போல வைத்திருந்து, சிருட்டி யாரம்பத்திலே மீட்டும் வெளிப்படுத்தலாற் கருவூர் எனப்படும். இதனைக் கர்ப்பபுரி யென்பர் வடநூலார்.

---

* பிரமகைவர்த்தபுராணம்-இது ஆதித்தியபுராணமெனவும் பெயர்பெறும். பசுபதீச்சுரப்பெருமானரது அட்ட மூர்த்தங்களுட் சூரியனு மொன்றா யிருப்பதனு லத்தெய்வத்தைப் பரம்பொருளென்றும், காலை, உச்சி, மாலைகளின் மும்மூர்த்திவடிவாய் விளங்குகின்றதென்றுங் கூறலால் இது திரிகுணயுக்தமாம்.

(உ) வேதங்களில் வல்ல பிரமதேவர் கற்பங்கடோறுந் தோன்றி யிங்குப் பெருந்தவம்புரிந்து, இத்தலத் தென்கீழ்த் திசையிலேயுள்ள சராசரங்களின் அடிச்சுவடுகளை நோக்கிப் படைத்தலாற் **கற்பபுரி** என்று பெயர்.

(ங - ச) சுவர்க்கத்தினுள்ள கோவாகிய காமதேனு ஆதிநாயகரைப் பூசித்து அருள்பெற்றுப் படைத்தற்றொழில் செய்தமையாற் **கோவூர், ஆனூர்** என்று பெயர்.

(ரு) பசுபதீசுரப் பெருமான் உத்துங்கமாக வெழுந்தருளியிருத்தலானும், எழுலகுமளந்த நெடிய விஷ்ணுமூர்த்தி அறிதுயில்கொண்டு இருத்தலானும் **பாற்கர புரமெனப்** பெயர்பெற்றது.

(சு) மலை, காடு, நதி, தீர்த்தம், நகரம், திருக்கோயில் என்னும் ஆறு மங்கலங்களையு முடைத்தாயிருத்தலாற் **சண்மங்கல க்ஷேத்திரம்** என்று பெயர்.

(எ) உலகத்தின்கணுள்ள எல்லாத்தலங்களுந் தோன்றுதற்கு முன்னே இது முதலிறதோன்றுவதால் **ஆதிமாபுரம்** என்னும் பெயராயுடைத்து.

(அ) பசுபதீச்சுரப் பெருமானாலே படைக்கப்பட்ட பலப்பல தலங்கள், தீர்த்தங்கள், மூர்த்தங்களெல்லாவற்றையுந் தன்னுட் கரக்க (ஒடுங்கச்) செய்தலாற் **கரபுரம்** என்னும் பெயர் கழறப்பெறும்.

(கூ) வீர சோழனென்னும் ஓரரசனாலே திருத்தி யாளப்பட்டமையால் **வீரசோழபுரம்** எனப் பெயர்பெற்றது.

(க0 - கஉ) வஞ்சிமரங்கள் நிறைந்த காடாகலின் **வஞ்சுளாரணியம், வஞ்சிவனம், வஞ்சியெனப்** பெயர்.

(கங - கச) மலராத வஞ்சியாகவும், வாடாத வஞ்சியாகவும் இருத்தலாற் **பூவாவஞ்சி, வாடாவஞ்சி** யெனப் பெயர் வந்தனவென்க. பாயா வேங்கை, பறவாக் கொக்கு, காயா வத்தி என்றாற் போல்வன.

(கரு) உலக மாதாவாகிய சௌந்தரநாயகி யம்மையார் பூசித்தமையானும், ஒடுங்கிய மூர்த்தி தலந் தீர்த்தங்களைத் தாய்போல மீட்டும் வெளிப்படுத்தலானுந் **தாயூர்** எனப் பெயர்பெற்றது.

(கசு) அரிச்சந்திர மகாராசன் குலத்தேபிறந்து, சுப்பிரமணியக் கடவுளின் திருவருள்பெற்ற முசுகுந்தச் சக்கிரவர்த்தி யினிது அரசாண்ட ஊராகலின் **முசுகுந்த நகரமென்று** பெயர்.

(கஎ) கடற்கரைக்கணுள்ளதாய ஊங்கனூர்க் கருகிலுள்ள சமுத்திரத்தினடுவிலே வஞ்சத்தால் முளைத்தெழுந்த கடப்பமரமொன்றை நல்லிளங்கோசனென்னு மோர் சேரராசன் வெட்டியாளலாற் **கடம்பெறிந்தான்பதி** என்று பெயர்.

(கஅ) பிரமர்கள் பூசித்ததனாற் **பிரமபுரம்** எனப் பெயர் வந்ததென்க.

## ச.—திருத்தலத்தின் எல்லை.

பசுபதீச்சுரப்பெருமானெழுந்தருளியிருக்கின்ற திருவானிலை யென்னுந் திருக்கோயிலிலிருந்து நாற்பக்கத்தும் ஐந்து குரோச தூரம் புண்ணிய பூமியாகும். குரோசமென்பது கூப்பிடு தூரம்.

---

## ரு.— திருத்தல விசேடம்.

திருக்கயிலை, மந்தரகிரி, மதுரை, காசி, காஞ்சி, பிரயாகை, நைமிசவனம், சேது, கருவூர் என்னும் ஒன்பது தலங்களும் ஆயிரத்தெட்டுச் சிவதலங்களினும் மிகச் சிறந்தன. இவ்வொன்பதி னுள்ளுங் கருவூரே விசேடமுள்ளது. மற்றைய எட்டுத் தலங்களிலும் அடையும் பயனை யிக்கருவூர்த் தரிசனத்தாலே யெளிதிற் பெறுவார்கள். ஒன்பதுதினம் பசுபதியை மெய்யன்புடன் றரிசிக்கின் பிறவிக ளெல்லாவற்றினுஞ் செய்த பாவங்களெல்லா மொழியப்பெற்று முத்தியடைவர். திருக்கோயிலைச்சுற்றி ஐங்குரோச தூரங்களிலிருக்கும் மணல்கள் கற்களெல்லாஞ் சிவலிங்க வடிவாம். நீரெல்லாம் ஆகாயகங்கை. விருக்ஷங்களெல்லாம் கற்பகதருக்கள். மனுடர்யாவருந் தவத்திற்சிறந்த முனிவர்கள். விளையாடல்களெல்லாம் யாக மெனப்படும். உண்பனவெல்லாம் பகவானுக்கு நைவேத்தியம் போன்றனவாகும். சொற்களெல்லாம் வேத சிவாகமத் தொனிகள். கண்படை செய்வது சமாதிகூடல் என்று கொள்ளவேண்டும். இவற்றைப் பொய்யென்றோர் நரகத்தில் வீழ்வர்.

தரிசித்தோர் தீவினை நீங்கப் பெறுவர். இவ்வூரிற் பிறந்தவர் சிவசாரூப்பியம் பெறுவர். இறந்தவர் சிவனடியைப் பெறுவர். சிவாகம விதிப்படி, பூசை, உற்சவம் முதலிய சிவபுண்ணியங்களைச் செய்தார் பலன் இவ்வளவென்று சொல்லுதல் யாவர்க்கு மியலாது. மந்திர செபம், தீக்ஷைபெறுதல், சிராத்தம், தானம், நோன்பு, புராணபடனம், யாகம், தர்ப்பணம் முதலிய புண்ணியங்க ளொவ்வொன்று செய்யிற் கோடாகோடியாக விருத்தியாகும்.

மழையில்லாவிடின் நூறு ஆதிசைவப் பிராமணரை யழைத்து ஆம்பிரவதியி னீராடச்செய்து, திருவானிலைத் திருக்கோயிற் சந்நிதானத்திலே உதய முதற் பதினைந்து நாழிகைவரையும் உருத்திர நமக செபஞ் செய்வித்து, சுவாமிக்கு அபிடேக அருச்சனைகள் செய்வித்து அந்தணர்க்கும் ஊட்டுவிக்கிற் றப்பாமே மழைபொழியும். மடங்கள், சத்திரம், திருக்குளம், கோயிற்றிருப்பணி இவை செய்வித்தோர், செய்தோர் பிறவா முத்தியடைவர். காலையிலே வாசனைத்திரவியங்கள் சாத்தினவரும், பங்குனி மாதத்திலே நடக்குந் திருவிழாத் தரிசித்தோரும் போகம் முத்தியடைவர். இவ்வூருக்குப் பாவமென்பதே யில்லையென்று மாபுராண முரைக்கின்றது. நோய்நீக்கம், சத்துருசெயம், செல்வப்பேறு, புத்திரப்பேறு, சிவஞானம், கல்விப்புலமை முதலிய

இகபர சாதனங்களையெல்லாம் கருவூரைத் தரிசித்தோ ரடைவர். இத்தலத்திலே புராசத்தி, காமதேனு, விட்டுணு, பிரமன், வியாசமுனி, இந்திரன், அக்கினி, யமன், அக்கினிபக்கனன் குமாரனான துர்ச்சயன், வருணன், வாயு, குபேரன், ஈசானன், வேதங்கள், சுப்பிரமணியக் கடவுள், தாடகை, சேர சோழ பாண்டியர்கள், நவக்கிரகங்கள், முசுகுந்தச் சக்கிரவர்த்தி, அநேக இலக்குமி, சரஸ்வதி, தேவமாதர்கள், இருடிகள், கோபிதாரத்துவசன் என்னும் அரசன், விபண்டகனென்னும் வேடன், சிவகாமியாண்டார், புகழ்ச்சோழ நாயனார், எறிபத்த நாயனார், கருவூர்த்தேவர் முதலாய பலர் பூசித்து முத்தியடைந்தனர். குறுநிலமன்னர் கொடுங்கோல்செலுத்தி உலகந் துன்பத்தில் மூழ்கவருங்காலத்தே சிவலிங்கப்பெருமானார் திருவுருவினிடத்துக் கறையான் என்னுஞ் செல் படருமாம். பலப்பல இலிங்கங்களும் தீர்த்தங்களும் இங்கே யுள்ளன.

வியாசமுனிவாழும் இலந்தைவனம், கோபிதாரவனம், அரசவனம், வஞ்சிவனம், வெண்ணெய்மலை, பிரமயாசகுண்டம், புகழ்ச்சோழர் முத்தியடைந்த அக்கினிகுண்டம், மூன்று நதிகள்கூடுந் திருமுக்கூடல், தென்கீழ்த்திசையிலே சராசரப்பொருளி னடிச்சுவட்டி னடையாளங்கள் முதலிய விசேடங்களிருக்கின்றன. சொல்லுமிடத்துக் கருவூர் கண்டோர் பின்னொரு கருவூர் காணார், எனவே யன்னவர்க்கு மீட்டும் பிறவியில்லை யென்பதே கருத்து.

---

## ௩.—தீர்த்த விளக்கம்.

இக்கருவூர்க்கணுள்ள தீர்த்தங்கள் மிக்க விசேடமுடையன. அவற்றின் மகிமையெல்லாந் தேவத்துதி முனிவராலே காலவர் என்னும் இருடிக்கு உரைக்கப்பட்டன. இக்கருவூரிற் காணப்படும் நீரெல்லாந் தீர்த்தங்களாயினும் விசேடதீர்த்தங்கள் ஆறு உள்ளன. அவை - ஆம்பிரநதி, தேனுதீர்த்தம், முருகதீர்த்தம், அரசதீர்த்தம், தாடகைதீர்த்தம், பிரமதீர்த்தம் என்பன. அவற்றுள்,

(க) ஆம்பிரநதி - இது திருக்கோயிலுக்குத் தென்றிசையிலிருந்து கிழக்கே யோடிச் சென்று வடக்கே திரும்பி யோடுகின்றது. ஓர்காலத்தே மழை பெய்யாது உயிர்கள்வருந்த, சிவபெருமான் உமாதேவியாரது திருவருளை நதிவடிவாக்கி விடுகவென்று அருள, அவ்வாறே யுமாதேவியார் தம்திருவருளை வராக மலையினின்றும் நதிவடிவாக ஒழுகச்செய்தனர். அங்ஙனம் மலையினின்றும் மாமரங்களி னிழல்வழியா யோடிச் செல்லாநிற்கும். அம்மையாரின் திருவருள் வடிவாகலால் அம்பா நதி எனவும், முனிவர்களாகிய மாமரங்களி னடிவழியாய் வருதலால் ஆம்பிரமாநதி, சூதநதி, * பொருநைநதி என

---

* பொருநை யென்பது - "பொற்பு மலியாம் பிரவதியாம் பொருநை யெனவும் புகலுவரால்" என்னுந் தலபுராணக்கூற்றானும், "வாழியரோ வாழி வருபுனனீர்த் தண்பொருநை - சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன் றொல் குலமே" என்னுஞ் சிலப்பதிகாரச் செய்யுளானும் அறிந்தாம்.

வும் பெயர்பெற்றது. ஆம்பிரம்=மாமரம். இந்நதியின் இருகரைகளினும் பல தலங்களுள்ளன. சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டத்திற் பேர்ாறு.என்று சொல்லப்படுவதிதுவே யென்ப. இவ்வாம்பிரநதி தோன்றி யொடுங்கும்வரையுஞ் சிறந்த தீர்த்தமாயிருப்பினும், திருவானிலையிலிருந்து ஐந்து குரோசம் அளவும் மகா விசேடம்பெற்று விளங்கலால் மகாதீர்த்த மெனப்படும்.

(உ) தேனுதீர்த்தம் - இது வெண்ணெய்மலைக்குக் கிழக்கே யுள்ளது. காமதேனு நாரதமுனிவர் சொற்படி யாம்பிரநதிக் கரையினுள்ள, புற்றினிடமாகப் பாதலத்தினின்றுந் தோன்றிய மகாலிங்கத்தைப் பூசித்துச் சராசரங்களைப் படைத்தது. அப்போது இத்தீர்த்தத்தை யுண்டாக்கிச் சிவபெருமானை யர்ச்சித்துத் தேவலோகஞ் சென்றது. காமதேனுவால் உண்டாக்கப்பட்டமையால் இப்பெயர் பெற்றது: இதன்கண் வைகாசிமாதப் பூரணையில் முழுகுவோர் முத்தியடைவர்.

(ங) முருகதீர்த்தம் - இது பசுபதீச்சுரத்திற்குக் கிழக்கே, ஆம்பிரநதிக்கு மேற்கேயுள்ள கோபிதார வனத்தி லிருக்கின்றது. முருகக்கடவுளால் உண்டாக்கப் பெற்றமையால் அப்பெயர் பெற்றது. அதிலே சித்திரைமாதம் ஞாயிற்றுக் கிழமையும் சுவாதி நட்சத்திரமுங் கூடிவருகின்ற பௌர்ணமி திதியிலே தோய்ந்து இயன்ற தானஞ்செய்யிற் கூற்றனணுகான். இரண்டுதீர்த்தங்கள் உண்டாக்கினரென்று தலதீர்த்த மகிமையிற் சொல்லப்பட்டுளது.

(ச) அரசதீர்த்தம் - இது ஆம்பிரா நதிக்கரையிலே, பெருமாள் கோயிலின் றென்பாங்கரே அரசவனத்தின்கணுள்ள அரசமரத்தின் பக்கத்தில் உள்ளது. வியாதமுனியினலே யுண்டாக்கப்பட்ட தென்ப. காயத்திரி மந்திரத்துடன் இதன்கண் மூழ்குவோர் விட்டுணு முதலிய தேவர்களாய் வேண்டும் போகங்களை யநுபவிப்பர்.

(ரு) தாடகைதீர்த்தம் - இது ஆதிநாயகராகிய பசுபதீச்சுரப்பெருமான் எழுந்தருளிய திருக்கோயிலினுள்ளே கீழ்த்திசையினுள்ள கிணறாகும். இதனைத்தாடகை யென்னும் அரக்கப்பெண் உண்டாக்கிப் பூசித்து மாரீசன் என்னும் புத்திரனைப் பெற்றாள். ஆகலின் அதனை யுட்கொள்வார் சற்புத்திரப் பேற்றை யடைவார்.

(சு) பிரமதீர்த்தம் - இது வஞ்சுளேச்சுரப்பெருமான் ஆலயத்திற்குக் கிழக்கே, பசுபதீச்சுரத்திற்குத் தெற்கே, ஆம்பிரவதி யாற்றிற்கு வடக்கேயுள்ளது. படைப்புத்தொழிலை வேண்டிய பிரமதேவர் இங்குவந்து தம்பெயரால் மூன்று விற்கிடை தூரமுள்ள இத்தீர்த்தத்தை யுண்டாக்கி வேண்டும் பேறெல்லாம் பெற்றார். சந்திர கிரகணம் - அத்தோதயம், மகோதயம், பௌர்ணமி, சிராத்ததினம், வியதீபாதம் என்னும் இத்தினங்களிற் றோய்வோர் பாவங்களெல்லா நீங்கப்பெற்று முத்தியடைவார்.

இவையன்றித் திருமுக்கூடல் என்னு மோர் தீர்த்தமுளது. ஆம்பிரமாநதி, மணிமுத்தாநதி, காவிரிநதி யென்னு மூன்றுநதிகளுங் கூடப்பெறும் இட

மே முக்கூடல் எனப் பெயர் பெறும். இவ்வாம்பிரநதி காவிரியாற்றுடன் கூடுமிடம் காவிரி சங்கமம் எனப்படும். அவைகளின் மூழ்குவோர் எல்லாத் தலங்களினுமுள்ள தீர்த்தங்களி லாடிய பயனைப் பெறுவார்கள்.

---

## எ.—அறுவகை மங்கலங்கள்.

"விண் மங்கலஞ் செய் பருப்பத மாரணியம்" என்னுந் தலபுராணச் செய்யுட்படி அறுவகை மங்கலங்களும் நிரம்பப்பெற்றது இத்தலமே.

**முதலாவது மங்கலம் - மலைகள்.** வராகமலை, வெண்ணெய்மலை, தான் றோன்றிமலை என்னு மிவைகளுள்ளன. இவற்றுள் **வராகமலை** யென்பது காசிப கோத்திரத்திற் றோன்றிய வராகமுனிவர் சிவபெருமா னுஞ்ஞைப்படி இம்மலையிலிருந்து யோகம்புரிந்தமையால் இப்பெயர் பெற்றது. யோககிரி என்றுஞ் சொல்லப்படும். இதன்பெருமை பழநித் தலபுராணத்துஞ் சொல்லப்பட்டுளது. **வெண்ணெய்மலை** நவநீதகிரி யென்று சொல்லப்படும். இது திருப்புகழ்பெற்ற தலங்களுள் விசேடமுள்ளது. இங்ஙன் தண்டபாணியாகச் சுப்பிரமணியப் பெருமான் எழுந்தருளி விளங்குவர். காமதேனு சராசரங் களைப்படைத்து அவையிற்றி னுணவிற்காகத் தேவாமிர்தத்தைத் திரட்டி வெண்ணெய்மலை யென்று செய்ததென்க. தானேதோன்றியமலை தான்றோ ன்றிமலை யெனப்படும். இது பசுபதீச்சுரத்திற்குத் தென்கிழக்கேயுள்ள சுப் பிரமணியதலம். இப்போது விட்டுணுதலமாகத் திரிக்கப்பட்டது.

**இரண்டாவது மங்கலம் - ஆரணியம்.** வஞ்சிவனம், கோபிதாரவனம், அரசவனம், இலந்தைவனம் என்னு நான்கு வனங்களுள்ளன. வஞ்சிவனம் வஞ்சுளாரணியம் எனவும், அரசவனம் பிப்பிலாரணியம் எனவும், இலந்தை வனம் வதரிவன மெனவுஞ் சொல்லப்படும்.

**மூன்றாவது மங்கலம் - நதி.** ஆம்பிரமாநதி என்ப தொன்றுண்டு.

**நான்காவது மங்கலம் - தீர்த்தம்.** மேற் சொல்லப்பெற்ற தீர்த்தங்க ளெனக் கொள்க.

**ஐந்தாவது மங்கலம் - நகரம்.** மலைகள்போன்ற வீடுகள் செய் குன் றுகள் முதலாய விளங்கப்பெற்று இராசதானியாயிருந்தது.

**ஆறாவது மங்கலம் - கோயில்.** திருவானிலை, வஞ்சுளேச்சுரம் என்னும் இரண்டாலயங்க ளுள்ளன. காமதேனுவாகிய பசுவினுற் செய்யப்பட்டது திரு வானிலை. திரு=அழகிய, ஆன்=பசு, நிலை=கோயில். அழகிய பசுவினுற் செய்யப்பட்ட கோயில் திருவானிலை யென்க. பிரமனுற் பூசிக்கப்பட்டது வஞ் சுளேச்சுரம். இன்னும் பிரமாவினுலே தாபிக்கப்பட்ட அரிகர புத்திர ரால யம், பத்திரகாளியம்மையார்கோயில், வெண்ணெய்மலைச் சுப்பிரமணியால யம் என்பவைகளு முள்ளன.

---

## அ.—மூர்த்தி விசேடம்.

இத்தலக்கணுள்ள சிலைகள் மணல்கள் எல்லாஞ் சிவலிங்க வடிவமேயாம். சந்திரன் குருபத்தினி சாபந்தொலையப் பூசித்த சோமேசலிங்கமும், அனந்த கணேச லிங்கமும், வெண்மணலைக்குவித்து அகத்தியர் பூசித்த அகத்திய லிங்கமும்,கொங்கணேச லிங்கம்,தாரகேச்சுர லிங்கம்,காஞ்சேச லிங்கம், விசால லிங்கம், திலகுலேச்சுர லிங்க முதலாயினவும் பக்கங்களிலிருப்பினும் ஐந்து இலிங்கங்கள்மாத்திரம் மிக்க பெருமையையுடையனவாகும். அதனாற் கருவூர் பஞ்சலிங்கேசம் என்றுஞ் சொல்லப்படும். அவை வருமாறு :

(க) புற்றிடங்கொண்டு எழுந்தருளிய ஆதிநாயகரென்னும் பசுபதியிலிங்கம்.

(உ) அதற்குக் கிழக்கே கோடீச்சுரலிங்கம். இது இப்போது பசுபதீச்சுரத்திலேயே ஓர்பால் தாபிக்கபபட்டது.

(ங) கோடீச்சுர லிங்கத்திற்குக் கிழக்கே கயிலாயநாத லிங்கம். இவ்விலிங்கம் புகைவண்டித் தங்கலுக்குத் தென்கிழக்கேயுள்ளது.

(ச) இக்கயிலாயநாதலிங்க மிருக்குமிடத்திற்குத் தெற்கே கரியமாலீச லிங்கம் இருந்தது. அது இப்போது பசுபதீச்சுரம் என்னுந் திருக்கோயிற் கீழை மண்டபத்திலே தாபிக்கப்பட்டுள்ளது.

(ரு) வஞ்சுளேச்சுர லிங்கம் - இது திருவானிலைக்குத் தெற்கே, ஆம்பிராவதிக்கு வடக்கே, பிரமதீர்த்தத்திற்கு மேற்கே யுள்ளது. இத்தலத் தமிழ்ப்புராணத்திலே, "எண்ணருமா நதிக்கரை யுத்தரத்து வஞ்சுளேசனுக்கு - நண்ணுகுணக் கெனவாதி நாயகர்க்க வாசியென்ன - வண்ணல்வரி விற்கெழுமூன் றம்புவிழு மாயிடைநற் - புண்ணியமா தீர்த்தமென வொருவாவி பொலிவித்தான்" எனப் பிரமசருக்கம் பதினெட்டாஞ் செய்யுளிற் கூறியவர், தலதீர்த்தச்சருக்கம் உஉ - ஞ் செய்யுளில், "நாற்றிசை வதனன் ஞாலம் படைப்பது கருதி நாடி - நோற்றஞான் றமலர்க் காட்டி நுவலும் வஞ்சுளேசனுக்கு - மேற்றிசை யிறைகோயிற்குத் தெற்கென விதித்த தூய - சேற்றிதழ்க் கமல வாவித் தீர்த்தமொன் றுளது மன்னே." என்று ஒன்றற்கொன்று முரணுவுரைத்தமையால் வஞ்சுளேச்சுர லிங்கம் பிரமதீர்த்தத்திற்குக் கிழக்கே யுள்ள தென்றும் இப்போது மேற்கே கட்டப்பட்டுள்ள தென்றுங் கொள்ளற்கு இடமாகின்றதென்ப. அது பொருந்தாது.

---

## கூ.—பசுபதீசப் பெயர் விளக்கம்.

இத் தலக்கணுள்ள முக்கிய கடவுளர் இருவர். ஒருவர் பசுபதீச்சுராலயத்தும், ஒருவர் வஞ்சுளேச்சுர ஆலயத்தும் ஒரு கணமு நீங்காது சாந்நித்திய

ராய் வீற்றிருந்து, உலர்ந்த விறகின் மாட்டுக் கடைந்தவழித் தோன்று மக்கி னிநேரத் தங்கிநின் றருள் புரிவார் என்க.

பசுபதீச்சுரத்தின்க ணெழுந்தருளுங் கடவுள் திருநாமம் பசுபதீசர், பசுபதீச்சுரர், பசுபதிக்கடவுள், பசுபதீச்சுர லிங்கப்பெருமான், ஆன்ம நாயகர் திருவானிலைக் கடவுள், திருவானிலை நாதர் எனச்சொல்லப்படும். பசுபதீசர் என்னும் பெயரை யெடுத்து அதன் மகிமையைச் சுருங்கச் சொல்வோமெனின், ஏனைய பரியாயப் பெயர்கட்கும் அதுவே யிலக்கண மாகல் கண்டு கொள்வார் பெரியோர்.

பசுபதீசர் என்னுந் திருப்பெயர் பசு+பதி+ஈசர் என்னு மூன்று சொற்கள் இரண்டு சந்தியாக நின்றன. பசு என்னுஞ் சொல் பச் என்னுந் தாதுவினடியாகப் பிறந்த பெயர். பச்=பந் தித்தல். பசு=பந்திக்கப்பட்டது. "பசு பசுத்துவ சம் யோகாத்" என்னும் வியாகரணப்படி செம்பிற் களிம்பு போல அநாதியேயுள்ள ஆணவ மல பந்த முண்மையான் ஆன்மாக்க ளெல்லாம் பசுவெனப்படும். காமதேனு வாகிய பசுவினாற் பூசிக்கப்பட்டமையின் இப்பெயர் வந்த தாகலிற் பசு வென்ப தீண்டு அதனையே குறிக்கு மெனக் கொள்ளாமோ வெனிற் கொள்ளாம். என்னை? காமதேனு வன்றி, அலங்காரவதி, பிரமன், விட்டுணுமுதலிய பலப்பல ரெண்ணிறந்தோர் பூசித்தலினவர் பெயரானும் வழங்கப்படல் மரபாகலானும், அப்பசுவிற்கு மேலாகத் திருக்கயிலைக்கண் இடபதேவர் சந்நிதியிலே யுள்ளனவாய்,

ஓம் ததேதி। ஸத்யோ ஜாதாத்ப்ருத்வீ। தஸ்யாஸ் ஸாங்கி விர்த்தி:। தஸ்யா: கபிலவர்ணா நந்தா। தங் கோம விபூதிர் ஜாதா।

என்றற் றொடக்கத்தவா அதர்வண வேதப் பிருகச்சபால சாகை கூறியபடி, சிவபெருமானது சத்தியோசாத முதலிய ஐந்து திருமுகங்களினின்றுந் தோன்றியன வாகி, முறையே கபிலம், கருமை, இரத்தம், வெண்மை, சித்திரம் என்னும் ஐவகை நிறங்களையுடைய நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை யென்னும் ஐவகைத் தெய்வப் பசுக்க ளிருத்தலாலும், அவற்றைக் காப்பவ னென்பதூஉம் அத்துணைச் சிறப்பன்மையானு மென்க. ஆகவே, பசுக்க ளென்பது உலகின்கணுள்ள வுயிர்த்தொகுதிகளையே குறிக்கு மென்பது. அவ்வுயிர்த் தொகுதிகடாம் விஞ்ஞானகலர் பிரளயாகலர், சகலர் என மூவகைப் படுவனவாம். அவற்றி னியல்களெல்லா மிங்கு விரிக்கிற் பெருகுமாகலிற் காமிகம், கிரண முதலிய மூலாகமங்களிலும், பௌட்கரம், மதங்கம், சித்தாந்த போதம், கந்த காலோத்தரம், சித்தாந்த சம்போதி, விசுவசா ரோத்தரம், சுத்தாக்கியை, பராக்கியை, தந்திரசாரம், அம்பாஸ்தவ முதலியவற்றினும் பரக்கக் காண்க.

பதி என்னுஞ் சொல், இந்திரனென்பது "நாமைக தேச நாமக்கிரகணம்" ஆகத் தேவ இந்திரனெனக் கொள்ளக் கிடத்தல்போல, பசுக்களுக்குப் பதியெனக் கொள்ளக் கிடப்பினும், விளங்க வைத்தலென்னு மழகு பற்

ரியும் "பசூநாம் பதி பசுபதி" என்னும் வியாகரண விதி பற்றியும் பசுபதி யென நின்றது. பதி யென்பது பா என்னுந் தாதுவின் அடியாகப் பிறந்த தென்ப. பா=காத்தல். பதி=காப்பவன். எனவே பசுக்களைக் காப்பவனென்பது பொருள். ஆன்மாக்களாகிய பசுக்களை யெல்லாம் உலகமாகிய பேரிடத்திலோட்டி, புன்முதலாய போகங்களை யனுபவிக்கச்செய்து கன்மத்தை நசிக்கப் பண்ணி, திருவருளாகிய நீரையூட்டித் தாபத் திரயங்களைப் போக்கி முத்தியா மிளைப்பாறுங் கோட்டத்தில் வைக்குங் காருணிய மிக்க பதியாமாறு காண்க. உலகின் கணுள்ள ஆட்டிடையர் மாட்டிடையர் யாவரும் தமக்கு ஓர் பிரயோசனத்தையு முதவாத ஆடுகளையாவது பசுக்களையாவது வளர்த்துப் பரிபாலிக்க மாட்டா ரென்பது ஆபால கோபால நியாயமேயாம். இப் பதியாங் கோபாலனுந் தனக்கென வோரணுத் துணையும் பயன்றராத எண்ணிறந்த பசுக்களைக் காக்கின்றான். இது பற்றியே வேதங்களுட் சிறந்த அதர்வ சிரச் சுருதியும், "ஓசுர! அவித்தியா சங்கார சமர்த்த! பாலுள்ள பசுக்க ளாயின் அதனை இடையன் காப்பது வழக்கம். பாலில்லா வரட்டுப் பசுக்களாயின் அவைகள் கருணையாற் காக்கப்படுவனவாம். ஆகவே யெவ்வாற்றானுந் தேவரீர்க்குப் பிரயோசனப்படாத பாலில்லா வரட்டுப் பசுக்கள் போன்ற யாங்கள் போற்றினுங் கருணையா லெங்களைக் காத்தருள் வீரென்று "ஙஹித்வா ஶ-௫ர ந-௫ந-ா ஸோஷ-ாஷ்ரா ஐவயெநவ:।" எனத் துதித்துப் போந்தது முணர்க. இவ்வுண்மை நோக்கியே "காயத்தின் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே - மாயக்க ளுண்டாரென் றுந்தீபற - வரட்டுப் பசுக்களென் றுந்தீபற" என்றார் நங்கள் சித்தாந்தப் பெருந்தகையார் திருவுந்தியாரிடத்து.

"வஷாஜீ ஶெவஶ-ா வதிஃ வஶ-௫நாம் வத-ாஷ்ஷா ஊ-ாதவ ஷிவஷாம்" என யசுர்வேத முமம், "தவூா ஷ்ர-ாஷ்ர: வஶ-௫நா ஊயி வதிஃ" எனச் சாமவேதமும், "ஸஜெ்ஸ்ரா திஃ வஶ-ாவதிஃ" என அதர்வண வேதமும், விளம்புமாற்றானே பரமசிவனே பசுக்கட்கு (ஆன்மாக்களுக்கு) எல்லாம் அதிபதி யென்பது தெளிவாயிற்று. இன்னும் "ஷ-௫யஸூஷா வதயஹு யெெஃ। ஸவ-ாயிவதஸ்ரம் கூ-ா-ா-ெத ஊஹாத்ா (பின்னரும் பலபதிகளைச் சிருட்டித்து எல்லாவற்றிற்கும் அதிபதியா நின்றான் பரமான்மா; சர்வாதிபத்தியத்தை நிகழ்த்துகின்றான் மகாத்மா) என வருஉஞ் சுருதி வசனங்களும் அதனை வலியுறுத்த தூஉ முணர்க. பதி என்னுஞ் சொல்லாற் சிவபெருமானை வணங்குவது ஆன்றோர் வழக்காம். அது பற்றி யன்றே யாசிரியர் பாதராய ணரும் "வதஸ்ர-ாஸா ஊம் ஜஸ்ராஙு" (பதிக் கொவ்வாமையால்) என் வருஉஞ் சூத்திரத்திற் பதியென்று பரசிவனையே குறித்தார். "ஙயிவெத ஷிதர வெத (அதிபதே மித்ரபதே)

எனச் சாம வேதமும், "ஈஶாந: ஸர்வவித்யாநாம் ஈஶ்வர: ஸர்வபூதாநாம்" ... "வ்ருக்ஷேப்யோ ஹரிகேசேப்ய: பஶூநாம்பதயே நமோ நம" என் ஸ்ரீருத்திர நமக மந்திரச் சுருதியும், காதபதிம் மேதபதிம் (காதபதிம் மேதபதிம்) என இருக்கு வேதமுஞ் சிவபெருமானையே பதியெனக் கூவிற்று.

"நதஸ்யப்ரதிமா அஸ்தி" என்னும் யசுர்வேத மந்திரசாகாவசனத்தாலும், "நதத் ஸமச் சாப்யதிகச்சத்ருச்யதே" என்னும் அதர்வணவேதக் கூற்றானும் அவனுக்குச் சமானனும் அதிகனுமில்லை யென்றவாறு.

ஈசன் என்பது ஈச் என்னுந் தாதுவினடியாகப்பிறந்த பெயர். ஈச்= ஆளல். ஈசன்=அனைத்தையும் உடைப்பொருளாக ஆளுவோன். பதி= ஈசன் என்பன குணசந்தியாய்ப் பதீசன் எனப் புணர்ந்து நின்றன. ஈசன், ஈச்வரன், ஈசானன் என்பனவெல்லாஞ் சிவபெருமானுக்கே பொருந்தும். மற்றொரு தேவர்க்குஞ் செல்லாதென்பது திண்ணம். என்னை? அவனே யெல்லாரையு மெவற்றையும் ஆள்வோனாகித் தானொருவரானு மாளப்படா மையாலென்க. அது,

ப்ரஹ்மாதயோ விஶோகாநாம்ஸ்ய ஷ்டிஸ்தித்யந்த ஹேதவ:।
நிக்ரஹாநுக்ரஹாப்யாம்வ ஶிவஸ்ய வஶவர்த்திந:।
ஶிவ: புநந கஸ்யாபி நிக்ரஹாநுக்ரஹாஸ்பதம்।
ஸர்வதோதிஶய ஐஶ்வர்யம் தஸ்யைவேதி விநிஶ்சய:।

(பிரமன் விட்டுணு உருத்திரனென்னு மிவர்களும் படைத்தல் காத்தல் அழித்தலென்னுந் தொழிற்குக் காரணர்களாய் நிற்பினும் நிக்கிரக அநுக்கிரகங்களாற் சிவபெருமானுக்கு வயப்பட்டவர்களேயாவர். சிவபெருமானொருவர்மாத்திரம் எவரது நிக்கிரக அநுக்கிரகங்கட்கு முட்படார். ஆகவே யவரது ஈசத்துவமே சாலவுஞ் சிறந்ததென்பது துணிபு.)

என்று வாயு சங்கிதை யுரைப்பதனாற் றெளிக. இத்தகைய பசுபதீசன் என்னுந் திருநாமத்தால் வேதாந்த சித்தாந்தங்க ளுணர்த்தும் பதி பசு பாசம் என்னுந் திரிபதார்த்தங்களும் பெறப்படுதல் காண்க. அவையன்றி, "கேவலா: கோஶா: ப்ராணா: ஸப்தாஜ: புரீநிதி। என்றற்றொடக் கத்தவாச் சர்வ ஞானோத்த ராகமங் கூறியவாறு, பாசம், மலம், சீவன், ஆன்மா, சிவன், பதி என்னுந் தடத்த சொரூபவியல்களும் பெறப்படுமென்க. இவ்வுலகமெல்லாம் எண்வகைப்பொருளி னடங்குமென்க. அவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்பன. இவற்றின்கண் முறையே பவன், சர்வன், உருத்திரன், வீமன், மகாதேவன், உக்கிரன், சோமன், பசுபதி என்னும் அதிதேவதையாகச் சிவபெருமான் இருந்தியக்குகின்றாரென்று, ப்ருதிவ்யாபஸ் தேஜோ வாயுராகாஶ: ஸூர்யாசந்த்ர:

வாயுர்பூமிஃ ஸுகாரவஸ்ய ஹோதேவஃ ஸர்வஸ்யாரூஃ வம ஊரஸ்ய ஷொடீஃ ஸுதாநஃ வஶுபதிஃ । எனவரும் வேத வசனங்க ளாற் றெரிதலானும், எட்டாவது மூர்த்தம் இயமானனுதலானும், அதன்க ணிருப்போர் பசுபதியாகலானும், அவரோ முடிந்த கடவுளா யவர்க்குமேலான கடவுளில்லை யென்பது சித்தாந்தமாயிற்று. இதனையே "நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன் - புலனுய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர் ந்துநின்ருன்" எனத் திருவாசகத் திருவருட்பாவும், "அம்பரா வனலா வனி லமே புவிநீ யம்புவே யிந்துவே யிரவி - யும்பரா லொன்று மறியொணு வணு வா யொழிவற நிறைந்தவொண் சுடரே" எனக் கிருவூர்த்தேவர் திருவாய் மலர்ந்தருளிய திருவிசைப்பாத் திருவருட்பாவும் விதந்துரைத்ததாம். "பதி தின்மேல் வழியுமில்லை பசுபதிக்குமேற் றெய்வமுமில்லை" என்றதனுற் கரு வூருக்குமேலான தலமும் பசுபதிக்குமேலான கடவுளு மில்லையென்றுணர்ந்து வழிபட்டுய்க. விரிவஞ்சி விடுத்தாம்.

## கΟ. வஞ்சுளேசப் பெயர்விளக்கம்.

வஞ்சிவனத்தின் ஆலயக்க ணெழுந்தருளியிருக்குஞ் சிவலிங்கப்பெரு மானே வஞ்சுளேசர், வஞ்சுளேச்சுரர், வஞ்சிவனநாதர், வஞ்சீசர், விதுலேசர் என அழைத்தன புராணங்கள். வஞ்சுல + ஈசன் என்னு மொழிகள் வஞ்சு லேசன் என்று புணர்ந்தது வடநூன்முடிபு. "லளயோரபேத" என்னும் வியாகரணவிதிப்படி லகரம் ளகரமாகத்திரிந்து முடிந்தது. வஞ்சுளம் - வஞ் சிமரம். அதனை யவெதஸெ । ஈயாஹ வஞுலவிஜூலய ஶீதவாநீ ஈவம் ஜலயாஃ । என இரண்டாவது காண்டம் வனௌஷதி வர்க்கத்தில் அம ரம் கூறியதனுற்காண்க.

"கூடார் வஞ்சிக் கூட்டுண்டு சிறந்த - வாடா வஞ்சி மாநகர் புக்கபின்" என்று இக் கருவூரைப்பற்றிச் சங்க நூல்க ளுரைக்கின்றன. வஞ்சியென் பதன் காரணத்தை யாராயுங்கால் அஃதோர் திணையானெய்திய பெயரென்ப. வஞ்சித்திணை யென்பது புறத்திணை யேழனு ளொன்ருய், முல்லையென்னும் அகத்திணைக்குப் புறமாய், இருபெரு வேந்தர்கள் மண்ணிடத்துள்ள விருப் பானே நாட்டிடத்தே சென்று அழிப்பதைக் குறித்தது. அக்காலத்து வஞ்சிப் பூவானுய மாலையைச் சூடிச்செல்வது வழக்கம். அத்திணைதான் இயங்குபடை யரவம், எரிபரந்தடுத்தல், வென்ருேர் விளக்கம், தோற்ருேர்தேய்வு, கொடை நிலைவஞ்சி, கொற்றவஞ்சி, நெடுமாராய நிலைஇயவஞ்சி, பெருஞ்சோற்றுவஞ்சி முதலாகப் பலவகைப்படுதல், தொல்காப்பியப் புறத்திணையியலில் "இயங்கு படையரவம்" எனவரூஉஞ் சூத்திரத்தா னுணரப்படும். புறநானூறு, புறப் பொருட் பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலியவற்றி னுஞ் சொல்லப்படுதல் காண்க. ஆகவே யாள்மாக்களென்னுந் தலைமக்கள்

ஆணவாதி முக்குறும்புகளையும் வென்று முத்திநிலங் கோடு நசையானே ஞானப்போ ரியற்றுறாஉங் காலத்துச் சயக்குறியாகத் திருவருளை மேற்கோடும் பெற்றியதென அதன்றத்துவப் பொருள் பெரியோர்கொள்பவாகலின், வஞ்சி யென்பது இறைவனோடு தாதான்மியமாய் நிற்குந் திருவருளையே குறிக்கும். ஆகலின் இத்தல விருக்க வஞ்சி திருவருள் வடிவ முடைத்தென்பது போதரும். அதனானன்றே யிக்காலத் தஃதுணரப்படாது மறைந்து விளங்கும். சிலர் வஞ்யென்பது அசோகமென்றும், சிலர் வன்னியென்றுங் கூறுப. அஃதுணரார் கூற்றும். என்னை? வஞ்சி அம்மரங்கட்கு வேறாயதோர் மரமென்று அமரமுதலிய நிகண்டானும், பத்துப்பாட்டு முதலிய நூல்களானுந் தெரிதலானென்க. இங்ஙனம் வஞ்சி மரங்க ணிறைந்த வனக்கட் டங்கலாற் பெருமானுக்கு வஞ்சுளேசர் என்று பெயர்.

---

## கக.—காமதேனு பூசித்தது.

நினைத்த உணவுகளையெல்லாங் கொடுக்கவல்ல தெய்வலோகப் பசுவாகிய காமதேனு, சிவபெருமான் றிருவருளினாலே படைப்புத்தொழில் செய்யுமாறு பூவுலகடைந்தது. நாரதர் சொற்படி இவ்வஞ்சி வனத்தை யடைந்து தவம்புரியும்போது, "புற்றினிடமாகப் பாதலத்தினின்றுந் தோன்றிய இலிங்கத்தைப் பூசிப்பாயாக" என்று அசரீரி கூறிற்று. அங்ஙனம் அதனைக் காமதேனு பூசித்து வரும்போது அதன் காற்குளம்புபட்டுச் சிவலிங்கப்பெருமானது திருமுடியினின்றும் இரத்தஞ் சொரிந்தது. அதுகண்ட காமதேனு மிகவருந்தப் பெருமானர் தோன்றி, "பசுவே! வருந்தற்க. இதுநம் திருவிளையாடல். இக்கோயிலும் யாமும் இன்றுமுதற் பசுபதீச்சுரம் திருவானிலை என்வும், பசுபதீசர் எனவும் பெயர்பெற்று வழங்கப்படுவேம். தென்கீழ்த்திசையிலே சராசரங்களி னடிச்சுவடுகள் இருக்கின்றன. அவைகளைப் பார்த்துப் படைக்கக்கடவாய்" என்று மறைந்தருளினர். காமதேனு அங்ஙனஞ் சென்று சிவத்தியானஞ்செய்து சராசரங்களைப் படைத்தது. அவைகளின் புசிப்பிற்காக அமிர்தத்தைத் திரட்டி வெண்ணெய் மலையொன்று செய்து, அதன் றென்கீழ்த்திசையிலே தன்பெயரால் (தேனுதீர்த்தம்) தீர்த்தமுமுண்டாக்கிப் பசுபதியைப் பூசித்து மேலுலகமடைந்தது. எத்துணை வெயிற்காலத்தும் அம்மலை தன்பெயர்க்குத் தக்கபடி குளிர்ச்சியுடையதாய் விளங்கும்.

---

## கஉ.—அலங்காரவதி யம்மையார் அருச்சித்தது.

சர்வலோக மாதாவாகிய உமாபிராட்டியார் திருக்கயிலைக்க ணெழுந்தருளியிருந்த பெருமானைப் பணிந்து, "நாயகரே! தவங்களுள் மேலான தவம் யாது?" என்று கேட்க, அவர் "நம்மை யருச்சித்தலாம்" என்றருள, அது செய்தற்குத் தகுந்த இடம் இத்தலம் என்பதனையும் உணர்ந்து அனிந்திதை

கமலினி முதலிய சேடியர்களோடும், சரச்சுவதி இலக்குமி முதலிய தேவப் பெண்களோடும் அலங்காரவதி யென்னும் பெயருடன் இங்குவந்து சிவாகம விதி வழுவாமற் பூசித்தனர். "தாம்மே ப்ரூஹி மகாவித்யாம் மோக்ஷ சாம் ராஜ்ய தாயினீம் | நிதாகத்வம் க்ருதார்த்தோஸி ச்ருணுவித்யாம் சநாதநீம்|| என்று வேதங்களாற் புகழப்பட்ட அம்மையார்முன் பசுபதீசப்பெருமான் தோன்றிப் பிரியாவரங் கொடுத்து உடனிருத்தி யருளினர். மற்றைய தேவ மாதர்களுக்கும் வேண்டிய வரங்கொடுத்தருளினர். இத்தலக்கண் அம்மை மார் இருவர் இருத்தற்குக் காரணம் யாதென ஆராயுங்கால், வழக்கமாய் இறைவனோடு உடன்விளங்கும் அபேதசத்தீ ஒன்று. பூசித்த அம்மையாக இருக்குந் தாதான்மியசத்தீ யொன்று. அபேத சத்தியாகிய பராசத்தி சௌந் தரநாயகி யம்மையார் எனவும், பூசித்த அலங்காரவதி (அலங்காரவல்லி) அம் மையார் தாதான்மிய சத்தியெனவுங் கொள்க. இத்தலத்திற் சத்திகள் இரு வர் இருப்பதும் ஓர் விசேடமே.

---

## கங.—பிரமன் பூசித்தது.

பிரமதேவர் படைப்புத்தொழில் கைகூடாமையாற் றிருக்கயிலையிற் றவம்புரிந்து, சிவபெருமா னுத்தரவின்படி யிங்குவந்து பசுபதிப்பெயரிய கட வுளைப்பூசித்து, அவர் தம் ஆரருள் பெற்று, வஞ்சுளேச்சுரத்திற்குக் கிழக்கே தம்முடைய பெயரால் ஒரு தீர்த்தம்புரிந்து சிலநாட் டவஞ்செய்து வெண் ணெய் மலையிற் சேர்ந்து அதன்வடக்கே ஒரு யாககுண்டமமைத்து, பல தேவர் முனிவர்களுடன் யாகத்தை முடித்துச் சரசுவதியை விவாகம்புரிந்து, பசுபதீசுரருக்குக் கோயிலுஞ்செய்து, திருத்தேர் உற்சவமுதலியவும் பங்குனி உத்தரநாளிற் செய்து, தென்றிசையிலே ஐயனார்கோயில், பத்திரகாளியம் மையார் கோயிலு மியற்றித் தமது உலகஞ் சார்ந்தார்.

---

## கச.—வியாசர் வழிபட்டது.

பராசர குமரனாகிய வியாசமுனி, பிரமதேவர் யாகஞ்செய்யுங் காலத்தில் இங்குவந்தார். யாகம் முடிந்தபின் எல்லாரும் போக இவரிருந்து பசுபதியை வழிபட்டார். திருவானிலை நாதனார் தோன்றி வியாசர் விரும்பியபடியே "அக் கினிதிக்கிலே ஆம்பிரநதிக்கு வடக்கே இலந்தைவனம் இருக்கிறது. அங் கிருந்து அருச்சிப்பாயாக" என்றருள, அவ்வாறே யாங்கிருந்து சீடருடன் அருச்சிக்கின்றார். உத்தர மீமாஞ்சை என்னுஞ் சூத்திரத்தையும் இவ்வூரி லிருந்தே செய்தனர் என்று நூல்கள் கூறுநிற்கும்.

---

## கரு.—திக்குப்பாலகர் சேவித்தது.

காசிபர்புத்திரனான இந்திரன், விசுவானர முனிவரின் புத்திரனாகிய அக் கினி, சூரியன் மகனாகிய யமன் என்னு மிவர்கள்வழிபட்டு முறையே கிழக்கு,

தென்கிழக்கு தெற்கு என்னுந் திசைக்கு அதிபரானார். மூராசுரன் மரபிற் றோன்றிய அக்கினிபக்கணன் குமாரனான துர்ச்சயன் என்பான் பூசித்து நிருதியாயினன். வருணன் திருமேழுக்கிட்டும், வாயு திருவலகிட்டும், விச்சிரவாமுனிகுமாரனான குபேரன் பசுபதிநாதனுக்கு இரத்தினாபரணங்கள் சாத்தியும் ஈசானன் பூசித்தும் முறையே மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்குத்திசைகளின் ஆதிபத்தியம் பெற்றார்கள்.

---

## கசு.—அமரர்முதலானோர் அருச்சித்தது.

திருமால் திருவானிலை நாதரைப் பூசித்துக் கியாதி மகளான இலக்குமியை மணந்து, காத்தற்றொழிலும் பெற்றுக்கருவூரிற்கோயில் கொண்டுளார். இருக்கு முதலிய நான்கு வேதங்களும் பூசித்து உண்மை சொல்லுதலாகியவரம்பெற்று மூவுலகிற்கும் பிரமாணமாயின. பலமுனிவர் தென்கீழ்த்திசையிலே வேள்விகளும் சிவப்பிரதிட்டைகளுஞ் செய்து மெய்வாழ்வுற்றார். சுப்பிரமணியக் கடவுள் ஆம்பிரவதிக்குக் கிழக்கிலும் மேற்கிலுந் தம்பெயராற் றீர்த்தங்களுண்டாக்கிப் பூசித்தார். நவக்கிரகங்களும், பீதகன், சாவகன், வசிட்டன் முதலிய முனிவர்களும் வழிபட்டு மேற்கதி யடைந்தார். தாடகை என்பாள் கோயிலுள் தன்பெயரால் ஓர்தீர்த்த முண்டாக்கிப் பூசித்துப் புத்திரவரமும் பதினாயிரம் யானைபலமும் பெற்றாள். விற்கொடியையுடைய சேரர்களும், சோழர்கள், பாண்டியர்களும் பூசித்து வேண்டிய பெற்றார். ஊங்கனூர் என்னும் ஊரின் பக்கத்திலுள்ள கடலில் வஞ்சத்தால் முளைத்த கடப்பமரத்தை வெட்டுதற்காக ஒருசேரன் பூசித்து அவ்வென்றி பெற்றுக் கடம்பேறிசேரன் எனவும் பெயர் பெற்றான்.

---

## கள.—சுக்கிரன் றுதித்து நோற்றது.

அசுரகுருவாகிய சுக்கிரன் இங்குள்ள இலந்தைவனத்திலே ஓர் யாகம் புரிந்து சிவபெருமா னிடத்தினின்றும் இறந்தவர்களை யெல்லாமெழுப்பும் மிருதசஞ்சிவினி யென்னும் மந்திரம்பெற்று, தன் சீடனான வியாழகுமரன் கசனென்பானையும், தன் குமரன் புத்திரனான ததீசிமுனிவரையு மெழுப்பினான்.

---

## கஅ.—முசுகுந்தன் முதன்மை பெற்றது.

திருக்கயிலாயமலையிலே வில்வமரத்தினடிநிழலில் உமாதேவியாருஞ் சிவபெருமானும் வீற்றிருக்கும்போது அம்மரத்திலிருந்த முசுக்களுள் (குரங்குகளுள்) ஒன்று விளையாட்டாக வில்வ இலைகளைப் பிடுங்கியெறிய அவ்விலைகள் இருவர் திருமேனிக்கணும் விழ, அதனை யருச்சனையாப்பாவித்து மூவுலகுங் காக்குஞ் சக்கிரவர்த்தியா யாண்டுவருகவென்று அருள்புரிய, அவ்வாறே யம்முசு அரிச்சந்திர வமிசத்திலே யிக்கருவூரிற்றோன்றியது. அதன்பெயர் முசு

முந்தன். அவன் பசுபதியைப் பூசித்து அரசுபுரிந்து, கந்தவேளை நோக்கித் தவம் புரிந்து, வீரவாகு முதலிய துணைவர்களையும் இலக்கம் வீரர்களையுந் தனக்குத் துணைவராகவுஞ் சேனைகளாகவும்பெற்று அரசுபுரிந்தான். தெய்வயானை யம்மையாரை முருகக் கடவுள் திருப்பரங்குன்றிலே திருமணம் புரிந்தருளியபோது அதனைத் தரிசிக்கும்படி யிக்கருவூரிலிருந்து தன் சேனைகளுடன் சென்று தரிசித்தான். வலன்என்னும் அசுரனுக்குத் தோற்ற இந்திரன் இங்கு ஒற்றரையனுப்பி முசுகுந்தச் சக்கிரவர்த்தியை யழைப்பித்து அவனுதவியால் வலனை வெற்றிகொண்டு, அதற்குப்பரிசிலாக விட்டுணுவினாலே பூசிக்கப்பட்ட சோமாஸ்கந்த மூர்த்தியையும் அஃதைப்போல விசுவகர்மனாலே செய்யப்பட்ட அறுமூர்த்திகளையுங் கொடுத்தான். அவ்வேழுவிடங்க மூர்த்திகளையும் பூவுலகிற் கொண்டுவந்து முறையே திருவாரூர், திருநாகைக் காரோணம் திருநள்ளாறு, திருக்காறாயல், திருக்கோளரியூர், திருவாய்மூர், வேதாரணியமென்னும் எழுதிருத்தலங்களினும் ஓரேதினத்தி லோரே யிலக்கினத்திற் பிரதிட்டைசெய்தான். அவை சத்தவிடங்கத் தலமெனப்படும். இந்திரனாலே தனக்குக்கொடுக்கப்பட்ட காவற்பூதத்தைத் தன் இராசதானிகளு ளொன்றாய பூம்புகார்ப்பட்டினத்தே நிறுத்தினானென்று சிலப்பதிகாரங் கூறிற்று. இங்கிருந்து பலகாலம் அரசுபுரிந்து பசுபதிநாயகன் திருவடியடைந்தான்.

---

## கக.—காலவமுனிவர் கதித்த பூசனை.

காசிபகோத்திரத்திற் றோன்றிய ஆதிசைவ முனீந்திரராகிய காலவரென்னு முனிவர் “இனிமேற் றாயரின்கருவூராது அத்துவிதமுத்தித் திருவூருற்று வாழ விரும்பித் தமது ஆசிரியராகிய தேவத்துதிமுனிவரை யடுத்து உபாயந் தெரித்தருளுகவென்று வேண்டாநிற்ப, அன்னவர் இவணுள்ள தீர்த்தவிசேடங் கூற வந்து ஆறுதீர்த்தங்களினும் விதிப்படி மூழ்கிப் பசுபதியை யருச்சித்துப் பரமுத்தியடைந்தார். “கருவூர் கண்டவர் கருவூர் காணார்” என்ற பழமொழி யந்நாட் டொடங்கி வழங்கலாயிற்று.

---

## உ௦.—விபண்டக வேடன் விழைவினுய்ந்தது.

பாதகமெல்லா மொருவடிவெடுத்தாற் போன்ற விபண்டக னென்னும் வேடன், மார்கழித் திருவாதிரை மகோற்சவம் வர, அடியார்களுடன் றானுந் திருநீறு, கண்டிகை யிவைதரித்துச் சிவபத்தனைப்போல் நடித்து இங்கே வந்து சுவாமியின் திருவாபரணத்தைக் கவரச் சமையம் பார்த்து இருந்தான். சுவாமி யெழுந்தருளி வரும்போது நெருக்கத்தினாலே தவறிக்கீழே விழுந்த வேடன் துவைப்புண்டு இறந்தான். அவனைப் பற்றி வந்த யமகணங்களைத் துரத்திச் சிவகணங்கள் அவனைத் திருக்கயிலைக்குக் கொண்டு போனார்கள். பாதகருமிவ்வூர்த் தரிசனங் கிட்டப் பெற்று இறப்பாராயின் சிவசாயுச்சிய முத்தியடைவ ரென்பது திண்ணம்.

---

## உக.—கோபிதாரத் துவசன் குட்டநோய் நீங்கியது.

விசாலை நகரத்திலிருந்த கோபிதாரத் துவசனு மரசனைக்காண அகத்தியமுனிவர் முதலான பற்பல முனிவர்கள் சென்றனர். செல்வச் செருக்கினல் அவர்க்குஉபசரணை புரியாது வாளாவிருந்ததுபற்றி அவரெல்லாம் மீண்டு குறுமுனி சிடரான பிரமிட்ட முனிவரைக்கொண்டு குட்டநோயுறச் சபித்தனர். அரசன் குட்டநோய் கொண்டு மருந்துமுதலிய எல்லாஞ்செய்தும் நீங்காமையாற் பிரமிட்ட முனிவரிடம்போய் இரந்தான். அவர் அகத்திய முனிவரிடம் போகவென்ன ஆங்குச் சென்றான். செந்தமிழ்முனிவனுர் சிவனடியார்களை யிகழ்ந்த நின்கதிக்குத் தீர்வில்லை யாயினும் குடிகள் வருந்துறலா னுய்திகூறுகின்றேம். கருவூர்ப் பசுபதி நாயகனை வழிபடுகவென்றுஞ் ஞாபிக்க, வந்துபிரமதீர்த்தத்தின் மூழ்கிப் பசுபதிச்சுரத்தையும் வெண்ணெய் மலையினையும், பிரமயாக குண்டத்தையும் எட்டுநாட் பிரதக்கிணஞ் செய்தான். எட்டாநாட்சிவன் ரேன்றி நோய்நீக்கி வரமுங்கொடுத்தனர். இளஞ் சூரியனைப் போலுமேனியுடன் ஊர்சேர்ந்து ஓர் புத்திரனைப் பெற்று அவன் மேற் பூபாரஞ் சுமத்தித் தானும் மனைவியு மிக்கருவூரிற் பசுபதியைப் பூசித்து முத்தியடைந்தனர்.

---

## உஉ.—எறிபத்த நாயனுர் இணையடி பெற்றது.

சிவனடியார்களுக்கு யாதேனுந் துன்பமுற்றபோது அதை நீக்கவல்ல மழுப்படையேந்திய கையையுடைய எறிபத்த நாயனுர் இவ்வூரிற் திருவவதாரம் புரிந்தார். சிவனடியார்க்குத் துன்பஞ் செய்வாரை மழுப்படையால் எறிந்து கொல்லுதலால் அப்பெயர்பெற்றார். அவர்பெருமை சொல்லற் கரியது. பெரியபுராணம், திருத்தொண்டத்தொகை, அகத்தியபத்த விலாசம், உபமன்னியு பத்தவிலாசம், திருத்தொண்டர் திருவந்தாதி முதலிய நூல்களினிடத்தே புகழப்பட்டவர். "தக்ஷச் சர்யாக்கிர்யா யோகே விந்யஸ்தாத்மா மகேச்வரே" எனச்சிவபெருமான் உமாதேவியார்க்கு உரைத்த பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே பேசப்பட்ட அறுபான்மும்மை நாயன்மார்களுளொருவர். இத்துணைப் பெருந்தகையார் சிவகாமியாண்டார் பசுபதீச்சுரப் பெருமானுக்குத் திருமாலைகட்டிச் சாத்தும்படி திருப்பூங்கூடையிற்கொண்டு வந்த புட்பத்தை உறையூர்ப் புகழ்ச்சோழ மகாராசாவின் பட்டத்து யானை பறித்துச்சிந்த, சிவகாமியாண்டார் முறையிட்ட "சிவதா! சிவதா" என்னும் ஒலிகேட்டு ஓடிவந்து பட்டத்து யானையினையும் பாகர்களையும் மழுவினு லெறிந்துகொன்றார். அதனையறிந்த சோழமகாராசாவும் வந்து, "எளியேனையும் வெட்டியருளுக" என்று தம்வாளைநீட்ட அவரது சிவபத்திகண்டு எறிபத்த நாயனுர் தம்முடைய கழுத்தை யரியத் தொடங்கினர். "நுங்களன்பை யுலகிற்கு வெளிப்படுத்துமாறு இங்ஙனம்செய்தேம், வருந்தற்க." என்றுசிவபெருமான் திருவாக்கு எழுந்தது. பாகர்களும் யானையும் உயிர்பெற்றெழ, திருப்

பூங்கூடையும் புட்பத்தால் நிறைந்தது. எல்லாரும் வியந்து போற்றினர். இங்ஙனம் விளங்கிய எறிபத்தநாயனர் பசுபதீசப் பெருமானைப் பூசித்து மாசிமாத அந்த நட்சத்திரத்தே முத்தி யடைந்தனர்.

---

## உ௩.—புகழ்ச் சோழநாயனர் முத்திபுக்கமை.

உறையூரிலிருந்து அரசுபுரிந்த புகழ்ச் சோழ மகாராசாவானவர் திறை வாங்கும்பொருட்டு இக்கருவூர்க்கு வந்து தம் அத்தாணி மண்டபத்திலிருந்து திறையளப்பித்தனர். "இங்ஙனந் திறைகொடாத மலையரணமுடைய அதிகனென்னும் அரசனுடன் யுத்தம்செய்து திறைகவர்க" என்று மந்திரிகளையுஞ் சேனைகளையும் அனுப்பினர். அவர்கள்போய் அதிகன் சேனைகளைக் கொன்றனர். அவனுங்கண்டு ஓடியொளித்தான். நகரத்துப் பொருள்களை யெல்லாஞ் சூறைசெய்து, படுகளத்துள்ள தலைக்குவியல்களையுங் கொண்டுவந்து அரசனுர் முன்வைத்தனர். புகழ்ச்சோழநாயனர் தலைகளுள் ஓர் சடைத்தலை யிருப்பக் கண்டு, ஆகெட்டேன் சிவனடியாரைக் கொல்வித்தேன். இதற்குப் பிராயச் சித்தம் வேறில்லை.

"யச்சண்டாளச் சிவ இதிவாசம் வதேத்தேந ஸகஸம் வதேத்தேந ஸகஸம் வசேத்தேந ஸஹபூஜ்ஜித। (சிவனெனுமொழியைக் கொடியசண்டாளன் செப்பிடினவனுடனுறைக - வவனெடு கலந்து பேசுக வவனேடருகிருந்துண்ணுக" என்று வேதங்களுரைத்தலாற் சிவனடியாரைப் பார்க்கினும் பெரிது வேறொன்றுமில்லை. அவர்க்குச் செய்யுந் தீங்கைப்பார்க்கினும் பெரிய பாதகம் வேறொன்று மில்லை" யென்று துணிந்து, பசுபதீச்சுரத்தினுளொரு அக்கினிக்குண்டஞ் செய்வித்து, புத்திரனுக்குப் பட்டங் கட்டுவித்து, சடைத்தலையைப் பொற்றட்டிலே வைத்துப் பட்டிஞலலங்கரித்துத் தந் தலைமீது வைத்துத் திருவானிலை யுடையானை வலம்வந்து அக்கினியில் மூழ்கிச் சிவபெருமானது திருவடியி விரண்டறக் கலந்தார். அத்திருநாள் ஆடிமாதத்துக் கார்த்திகை என்க.

---

## உ௪.—கருவூர்த்தேவர் கதிபெற்றது.

கருவூரிலே பிராமணகுலத்திலே தோன்றினமையாற் கருவூர்த் தேவரெனப் பெயர்பெற்றார். உலகாயதம், பௌத்தம், ஆருகதம், தார்க்கிகம், மீமாஞ்சம், ஏகான்மவாதம், பாதஞ்சலம், பாஞ்சராத்திரம், சாங்கியம், சைவம், பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், அயிக்கவாதசைவம், பாடாணவாதசைவம், சங்கிராந்தவாதசைவம், நிமித்தகாரண பரிணமவாதசைவம், அவிகாரவாதசைவம், சுத்தசைவம், பேதவாதசைவம் என்னும் புறப்புறம், புறம், அகப்புறம்,அகம் என்னு நால்வகைச் சமயங்களை யெல்லா நன்குணர்ந்து அவற்றுட் சுத்தாத்துவித சைவசித்தாந்த சம்யமே மெய்ச்சமயமெனத் தெளிந்து நன்னெறிக்க ணெழுகினர். சாழசித்தராய்த் தோன்றிச் சிவஞான நிட்

டாபரராய் விளங்கிச் சகல சித்திகளுங் கைவரப்பெற்றமையிற் பற்பல திருவிளையாடல்களையும் புரிவாராயினர். இவருண்மை தெரியார் இவரை வாமமார்க்கத் தவரென்று இகழ்ந்தனர். அவர்க்கு உண்மைகாட்டும்படி அகாலத்திலே மழை வருஷிக்கச்செய்தும், ஆம்பிரவதிநதி பெருகச்செய்தும், திருவானிலைத் திருக்கதவத்தாள் திறக்கப்பண்ணியும், பூதங்கள் குடைபிடித்துவரக் கற்பித்தும் இங்ஙனம் பற்பல அற்புதங்கள் செய்தனர்.

கொங்குநாடு, குடநாடு, கன்னடம், துளுவம், மகதம், கோசிகம், கோசலம், உஞ்சை, அவந்தி, சாளக்கிராமம், ஆரியம், மாளவம், மராடம், அயோத்தி, கவுடம், வல்லவம், மற்சம் முதலிய தேசங்கடோறுஞ்சென்று சிதம்பரம், காஞ்சி முதலிய தலங்களையுந் தரிசித்துவந்தார். குருகூர் வந்தபோது திருமால் ஆஞ்ஞைப்படி வைணவர்களெல்லாம்வந்து வணங்கி உபசரித்தார்கள். திருநெல்வேலியை யடைந்து நெல்லையப்பரை யழைக்க வாராமையால் "சிவனிங்கில்லாமையால் நல்லோர் குறைந்து நகரம் எருக்கெழுக" என்று சபித்து, மீட்டும் அடியார்களெல்லாம் வந்து வேண்டத் திருவிசைப்பாப்பாடிச் சாபத்தையும் பரிகரித்தார். அதன் மேற்கே ஒரு குரோசத்திலுள்ள சிவலிங்கத்தைத் தழுவக்குழைந்தது. பின் திருவிடைமருதூர்வந்து சிவபெருமானை யழைத்தபோது அவர் கன்றின் குரல்கேட்ட புனிற்றாப்போலே "ஓலவோல" வென்றருளிக் காட்சியீதல் கண்டு திருவிசைப்பாப் பாடியருளினர். கசேந்திரமோட்சமென்னும் விட்டுணுதலம் அடைந்து, "மாலே" என்று அழைக்க அவரோடிவந்து என் வேண்டுமென்றார். தேவர் மதுவேண்டுமென்ற மாத்திரையே கோவிந்தன் காளியைக் கொணர்கவென அவளுங் கொண்டுவந்தாள். அதனையறிந்த நகர்கோயிலிலுள்ள வாமிகள்வந்து வணங்க, அவரை மீன் கொணருமாறு உரைத்தனர். அவர்கள்தேடியும் அகப்படாமைகூற, அருகிருந்த வன்னிமரத்தைநோக்கி மீன்வருஷிக்கும்படி கட்டளையிட அவ்வாறு அது வருஷித்தது. தேவர் அவர்களைநோக்கி, "நீவிரிங்ஙனஞ்செய்யாது சாதாரண மதுமற்சங்களை யுண்டுழலுவதென்னை"? யென்றறிவுறுத்து, முத்தியை விரும்பிய அவர்களையெல்லாம் பொதியம்வருமாறருளி, ஓர் விட்டுணு தலத்தையடைந்து அழைக்க அவர்வாராமையாற் "பூசைபோக" எனச் சபித்து, பொதியஞ்சென்று அகத்தியனாரைக் கண்டு அங்கொருசார மர்ந்தார்.

தஞ்சையிலே சோழராசனாற் கட்டப்பட்ட ஆலயத்திலே பிரதிட்டை செய்யத்தொடங்கி மருந்து இளகிப் பந்தன மாகாமைகண்டு, கருவூரார்வந்தன்றிக் காரியஞ் சித்தியாது" என்று வருந்த, ஆங்கிருந்த போகநாதசித்தர் ஓர் காக்கையின்காலி லோலைகட்டிவிட அதனையறிந்து வந்து சிவலிங்கப்பெருமானை ஆவுடையாளுடன்சேர்த்து நிறுத்தித் தம்பலத்தை யுமிழ்ந்து பந்தனஞ் செய்தார். தேவர்களும் வியந்து பூமாரிபொழிந்தார். திருவரங்கஞ்சென்று ஓர் பொதுமகட்குத் திருமாலின் இரத்தினமாலையை யவர்கொடுக்கக் கொடுத்தார். பின்னர் வைணவர் வாதிக்கத் திருமாலைக்கொண்டு இம்மாலையை நாமே கருவூர்த்தேவர்க்குக் கொடுத்தோமென்று சொல்லச் செய்தார். பின்னர்

இக்கருவூர்வந்து இருந்த காலத்தே யிங்குள்ள பிராமணர்கள் பலர்கூடி யரச னிடம்போய், பிராமண வொழுக்கிற்கு ஒரு சிறிதும்பொருந்தாத வாமபூசை புரிகின்றார். அவரைக் கண்டித்தல்வேண்டு மென்று கேட்டார்கள். அரசன் தேவரிருக்கை யடைந்து பார்க்கையில் ஆங்குள்ளன வெல்லாஞ் சிவாகமவிதிப் படி செய்தற்குரிய பூசாகரணங்களாக இருத்தல் கண்டான். பயந்து தேவரின் றிருவடிகளை வணங்கி அவர் கட்டளைப்படியே முறையிட்ட வைதிகப் பிரா மணர்கள் வீடெல்லாம் பார்க்கும்போது மதுக்குடங்களும் புலால்களும் நிறை ந்திருத்தலைக் கண்டு அப்பிராமணர்களை யெல்லாங் காட்டிற்குத் துரத்தினான். கருவூர்த்தேவர் கேட்டு அங்ஙனஞ் செய்யற்கவென்று ஆஞ்ஞாபிக்க ஒன்றுஞ் செய்யாது விட்டான். பிராமணர்க ளெல்லாஞ்சேர்ந்து ஆம்பிரநதிக்கரையி லிருந்து தேவர்க்குத் துன்பஞ்செய்ய யோசித்தனர். கருவூர்த்தேவர் அவர் கட்குமுன் சென்றும் அவர்க்கு அகப்படாமல் ஆலயத்தையடைந்து ஸ்ரீபசு பதீசுரப் பெருமானுரைத் தழுவிக்கொண்டு அவருடன் இரண்டறக் கலந்தரு ளினர். அவர் பாடியருளிய திருவிசைப்பாக்களாவன—கோயில் என்னுஞ் சிதம்பரம், திருக்களந்தை யாதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம் பலம்' திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோளேச் சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை ராசராசேச்சுரம், திரு விடைமருதூர் என்னுந் திருத்தலங்கள் பத்திற்கு முரைத்தவைகளாம். இவை மற்றைய எண்மர்செய்த திருவிசைப்பாக்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன. இவையிற்றைச் சிவபெருமான் றிருவருளாஞ்ஞைப்படி ஒன்பதாந் திருமுறைத் திருவருட்பாக்களுட் சேர்த்துளார் ஆதிசைவ குலசிகாமணியான நம்பி யாண்டார் நம்பிகள். இவர் முத்தி அடைந்ததினம் தைமாதப் பூசநட்சத் திரப் பௌர்ணமி ஆகும்.

---

## உரு—நாரசிங்க புராணசரிதம்.

பதினெட்டு உப புராணங்களுளொன்றாய நாரசிங்க புராணத்திலே மேல்வருஞ் சரித்திரம் இயம்பப்பட்டது. இரணிய கசிபு என்னும் அசுரனைக் கொன்ற திருமாலாகிய நரசிங்கம் வெறிகொண்டு உலகை யலைக்கத்தொடங் கிற்று. தேவர் முனிவர் முதலாயினோர் யாவரும் கருணையங்கடலாகிய சிவ பெருமானிடஞ் சரண்புகுந்தனர். பசுபதிப்பெயரிய தனிமுதற்கடவுள் வீர பத்திரரைத் திருநோக்கஞ் செய்தருளினர். வீரபத்திரக்கடவுள் உடனே எட் டுக்கால்களும் நீண்டவாலும், இருதிருமுகமும் பெரிய சிறகுகளும் பேரிரைச் சலும் மகோக்கிரமுங் கொண்ட சரபத்திருவுருவை யெடுத்துச் † சென்று

† சரபமூர்த்தி சென்றகாலத்து மகாமேருமலை யவரது திருவடிகளெட் டனு ளொன்றின் விரலின்நகக் கண்ணிற்குள் ஓர் உழுந்துபோல வருண்டுகிட ந்ததென்றும், சிறகுகளின் விசைக்காற்றாற் பஞ்சுபோலப் பறந்து திரிந்ததென் றுஞ் சரபபுராணம் உரைக்கின்றது. சங்கரசங்கிதை ஆசுரகாண்டமு மவ் வாறே கூறிற்று.

17615

திருமாலாகிய நரசிங்கத்தின் றலையையுங் கால்களையுங் கொத்தி இரத்தவெள்ள மூற்றெடுத்தோட நகங்களாற் கிழித்துத் துன்பஞ்செய்தகாலத்துப் பிரமன் முதலானோர் "பகவ! வருத்துவதன்றி யதனுயிரைக்கொல்லுதல் கூடா" தென்ற பிரார்த்தனைக்கிரங்கித் தோலையுரித்துக் கொண்டுபோந்தார். நரசிங்கம் அறிவுதோன்றவெழுந்து சிவத்துரோகந் தீரவும், திதித்தொழில் பெறவும், தம்முடைய வைகுண்டபோக்கியங்கள்பெறவும் இக்கருப்பபுரியில்வந்து கடுந்தவஞ்செய்வாராயினர். இரணிய கற்பஞ்சென்று வாமனகற்பந் தொடங்கிற்று. பிரமருஞ் சிருட்டிதொழில் பெறுவா னிவ்விடஞ்சேர்ந்து தவம்புரிந்தார். இரேவதிநாளிற் சூரியன் பிரவேசித்தகாலத்தே உற்சவஞ் செய்யத்தொடங்கினர். எல்லாத் தேவர்களும் முனிவர்களும் மற்றைய கணர்களுங் கருவூர்சேர்ந்து விழாத்தரிசித்தார். பானுகம்பனென்னும் உருத்திரகணத் தலைவரும் வீரபத்திரக்கடவுளின் ஆஞ்ஞைப்படி யிவண்வந்து, உத்தரநாளின் மகிமைகளையெல்லாம் எடுத்துக்கூறி, கல்யாணசுந்தரவிரதத்தை யநுட்டித்தார். திருமால், பிரமன் முதலிய தேவர்கள், முனிவர்கள், மற்றைய் கணர்கள் யாவரும் அநுட்டித்து இரதமகோற்சவமுங் கொண்டாடினர்கள்.

அவற்றின் மகிமையாலே திருமால் பிரமன் என்பார் தத்தந் தொழில்கள், மனைவிமார், வாகனம், உலகம், போக்கியம் இவைகளையடைந்தனர். பானுகம்பர் ஆயிரந்தலைகளும், ஆயிரம்வாயில் வைத்தூதப்படும் ஆயிரமுகங்களையுடைய பணிலம் என்னும் சங்கினையும் கணத்தலைமையையும்பெற்றார். சூரியன் உஷாதேவியை மணம்புரிந்தான். சந்திரன் தக்கன் புத்திரிகளாகிய அசுவினி முதலிய இருபத்தேழு பெண்களை மணந்தான். இந்திரன் புலோமன் மகளாகிய இந்திராணியை நாயகியாப்பெற்றான். திருமாலின் இருகண்களினின்றுந்தோன்றிய அமிர்தவல்லி சௌந்தரியவல்லி என்னு மிருவரும் முறையே தேவசேனை (தெய்வயானையம்மை) இலவலிநாயகி (வள்ளியம்மை) எனத் தோன்றி, உபய கதிர்காமமாகிய புதுச்சந்நிதி யென்னும் பொற்றலக் கந்தவேளை நாயகனாக அடைந்தார்.

வேதாங்கமுனிவரின் குமாரத்தியும் அழகுக் கடலுமான சுகேசியென்பாள் சைவசித்தாந்த பரமாசாரியரான திருநந்திதேவரைக் கல்யாணஞ்செய்தாள். சத்திய பூரணரென்னும் முனிவர் கண்களினின்றுந் தோன்றிய பூரணை புட்கலை என்னு மிருபெண்களும் அரிகர புத்திரரை மணந்தனர். மன்மதனிரதியையும், இராமன் சீதையினையும், சாம்பவதி கிருட்டிணனையும், சௌபரிமுனிவர் பலப்பல பெண்களையும், அகத்தியர் உலோபாமுத்திரையையும், வசிட்டர் அருந்ததியையும் விவாகஞ்செய்து கொண்டனர். ஆகலின் இக்கல்யாண சுந்தரவிரதம் வஞ்சுளாரணியத்திலேயே யநுட்டிக்கவேண்டும். அதனால் அதனை மங்களபுரி யென்பர் பெரியோர். இவ்வாறு நரசிங்கர் கூறினர்.

## காசிகண்டம்.

புராஹிரண்யகசிபும் தைத்யராஜம் மகாபலம் | ஹத்வாதத்ருதிராபகப்ரமத்தம் யாசிதஃ சுரைஃ | ருத்ரசரப ரூபேண நரஸிம்ஹமபீட்யத் |

### இருக்குவேதம்.

அகம் ம்ருணு: சரபாயருஷிபந்தவே | தைத்ரீயகம் - ஹரிக்ம் ஹரந்த மநுயந்திதேவா: விச்வ்ச்யேசாநம் ருஷபம்மதீநாம்:

### நாரசிங்க புராணம்.

ததோந்ருசிம்ஹ மாலோக்யசங்கரம் யகநஸாகஸ: தந்ந்ருசிம்ஹசிரோயா வந் நகைச்சேத்தும் ஸமுத்யத: | இத்யாதி ஏவம்ஸசூல சக்ரௌஜௌ மஹாரண ஸமுத்த்ருதௌ |

விலோக்ய விபுதாஸ்ஸர்வே மஹாபயமுபாயயு: | இத்யாதி | ந்ருசிம்ஹ சரபௌ த்ருஷ்ட்வாததோ ப்ரஹ்ம ஸனாஸ்ஸஹ | துஷ்டாவபரமப்ரீத: கரௌக்ருதாம்ஜலிம்தத: |

என வருஉஞ் சுலோகங்களாலுமுணர்க.

---

### உசு.—நூற்பயன்.

இக்கருவூர் மான்மியத்தை அன்புடன்கேட்டவர், படித்தவர், எழுதினோர், எழுதுவித்தோர் ஆகிய மெய்யன்பர்கள் யாவரும் நோய்நீக்கம், சத்துருசெயம், சற்புத்திரப்பேறு, மங்கலமணம், செல்வம், கல்வி, புகழ், ஞானம் முதலிய எல்லாப்பேறுகளும் பெற்றுய்வாரானல், கருவூர்த்தலமடைந்து வழிபட்டவர்பேறு சொல்லற்கரிய தென்று சூதர் நைமிசமுனிவர்களுக்குச் சொல்லிமுடித்தார். முனிவர்கள் யாவருங்கேட்டுச் சிவபெருமான் றிருவருள் பெற்று வாழ்ந்தனர்.

---

### உஎ.—பசுபதிநாம வேத பாத ஸ்தோத்திரம்.

### யசுர்வேத கர்ப்பசாகை.

𑌯𑌤𑌿𑌯𑍋𑌨𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑍇𑌯𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂।
𑌭𑌰𑍍𑌗𑌂 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌂 𑌜𑌗𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌂।
𑌯𑍋𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑍇𑌯𑌂 𑌯𑌤𑌿𑌤𑌪𑌸𑍍𑌯𑍇 𑌮𑌹𑌤𑍍𑌤𑌪𑌃।

யதியோந்யா: ப்ரமுச்யேயம் பிரபத்யே பரமேச்வரம்|
பர்க்கம் பசுபதிம் ருத்ரம் மஹாதேவம் ஜகத்குரும்|
யோநிபந்தாத் ப்ரமுச்யேயம் யதிதப்ஸ்யே மஹத்தப:|

### அதர்வணவேத நரசிம்மதாபினி.

𑌋𑌤𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌿𑌙𑍍𑌗𑌲𑌂।
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌰𑍇𑌤𑌂 𑌵𑌿𑌰𑍂𑌪𑌾𑌕𑍍𑌷𑌂 𑌶𑌙𑍍𑌕𑌰𑌂 𑌨𑍀𑌲𑌲𑍋𑌹𑌿𑌤𑌂।
𑌉𑌮𑌾𑌪𑌤𑌿𑌃 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌃 𑌪𑌿𑌨𑌾𑌕𑍀𑌹𑍍𑌯𑌮𑌿𑌤𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃।

இருதம் சத்யம் பரம்பிரஹ்ம புருஷம் க்ருஷண பிங்களம்|
ஊர்த்வ ரேதம் விரூபாக்ஷம் சங்கரம் நீல லோகிதம்|
உமாபதி: பசுபதி: பிநாகீஹ்ய மிதத் யுதி:|

### ஷை வேத சரபசாகை.

𑌯𑍋 𑌲𑍀𑌲𑌯𑍈𑌵 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌂 𑌦𑌦𑌾𑌹 𑌕𑌾𑌮𑌂 𑌕𑌾𑌲𑌂 𑌸𑍋𑌮
𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌃। 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌪𑌶𑍁𑌤𑌾𑌮𑌵𑌾𑌪𑍁𑌃 [𑌸𑍍𑌵
𑌯𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌰𑍍𑌬𑌭𑍂𑌵। 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑍋

யோலீலயைவதிரபுரந்ததாக காமம் காலம் சோம சூர்யாக்
நிநேத்ர:। ஸர்வேதேவா: பசுதாமவாபு: ஸ்வயம்தஸ்மாத்
பசுபதிர்பபூவ। தஸ்மை ருத்ராய நமோஅஸ்து।

### ஷை வேதம் - பஸ்ம சாபாலம்.

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌭𑍁𑌜𑌮𑍂𑌲𑍇 𑌭𑌵𑌾𑌯𑍇𑌤𑌿 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯𑍇𑌤𑌿 𑌤𑌨𑍍
𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑍇 𑌶𑌰𑍍𑌵𑌾𑌯𑍇𑌤𑌿 𑌤𑌤𑍍𑌕𑌰𑌪𑍃𑌷𑍍𑌠𑍇
𑌪𑌶𑍁𑌪𑌤𑌯 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌮𑌭𑍁𑌜𑌮𑍂𑌲𑍇।

தக்ஷிணபுசமூலேபவாயேதிதந்மத்யேருத்ராயேதிதந்மணிபந்தே
சர்வாயேதி தத்கரப்ருஷ்டே பசுபதயஇதி வாமபாகுமூலே।

### சாமவேதம் - சாபாலசாகை.

𑌭𑌗𑌵𑌨𑍍𑌕𑍃𑌪𑌯𑌾𑌮𑍇 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌨𑌿𑌵𑍇𑌦𑌯 𑌇𑌤𑌿𑌸𑌤𑍇𑌨𑌪𑍃
𑌷𑍍𑌟𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌨𑌿𑌵𑍇𑌦𑌯𑌾𑌮𑌾𑌸 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂, 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿 𑌰𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌾𑌵𑌿𑌷𑍍
𑌟𑌸𑍍𑌸𑌂𑌸𑌾𑌰𑍀𑌜𑍀𑌵𑌸𑍍𑌸 𑌏𑌵𑌪𑌶𑍁𑌃, 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌪𑌞𑍍𑌚𑌕𑍃𑌤𑍍𑌯 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌸
𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰 𑌈𑌶𑌃 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌃,
𑌕𑍇 𑌪𑌶𑌵 𑌇𑌤𑌿 𑌪𑍁𑌨𑌶𑍍𑌚𑍈𑌨𑌮𑍁𑌵𑌾𑌚। 𑌜𑍀𑌵𑌾𑌃 𑌪𑌶𑌵 𑌉𑌕𑍍𑌤𑌾𑌃।
𑌤𑌤𑍍𑌪𑌤𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌸𑍍𑌸 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑌂 𑌹𑍋𑌵𑌾𑌚।

பகவங்கிருபயாமே ரகஸ்யம் ஸர்வம்நிவேதயேதிஸதேநப்ருஷ்டஸ்
ஸர்வம்நிவேதயாமாஸதத்வம் । பசுபதிரகங்காராவிஷ்டஸ்ஸம்ஸாரி
ஜீவஸ்ஸஏவபசு: । ஸர்வஞ்ஞபஞ்சகிருத்ய ஸம்பந்நஸர்வேச்வரஈ
சப்பசுபதி: । கேபசவஇதிபுநச்சதமுவாச । ஜீவா:பசவஉக்தா: ।
தத்பதித்வாத்பசுபதிஸ்ஸபுநஸ்தம்ஹோவாச ।

### ஸ்ரீ நுத்திர நமகம்.

𑌨𑌮𑌃 𑌸𑍋𑌮𑌾𑌯 𑌚 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌚 𑌨𑌮𑌸𑍍𑌤𑌾𑌮𑍍𑌰𑌾𑌯 𑌚𑌾𑌰𑍁𑌣𑌾𑌯 𑌚
𑌨𑌮𑌶𑍍𑌶𑌙𑍍𑌗𑌾𑌯 𑌚 𑌪𑌶𑍁𑌪𑌤𑌯𑍇 𑌚 𑌨𑌮𑌃।

நமச்சோமாயசருத்ராயசநமஸ்தாம்ராயசாருணாயச
நமச் சங்காயச பசுபதயேச நம ।

### தைத்திரீய ஆரண சாகாயாம்.

𑌨𑌮𑍋 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌬𑌾𑌹𑌵𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌾𑌯 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌰𑍂
𑌪𑌾𑌯 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌪𑌤𑌯𑍇𑌽𑌮𑍍𑌬𑌿𑌕𑌾𑌪𑌤𑌯 𑌉𑌮𑌾𑌪𑌤𑌯𑍇 𑌪𑌶𑍁𑌪
𑌤𑌯𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃।

நமோ ஹிரண்யபாகவே ஹிரண்ய வர்ணாய ஹிரண்ய ரூபாய
ஹிரண்ய பதயேம்பிகாபதய உமாபதயே பசுபதயேநமோநம: |

**கிருஷ்ண யசுர்வேதம்.**

[illegible]

யேஷாமீச: பசுபதி: பசூநாம் சதுஷபதா முதசத்விபதாம் |

---

### உஅ.—பசுபதிநாம கலாஸ்துதி.

**சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்.**

காயத்ரீ வல்லபத்வாத் தசரத தநயஸ்தாபிதாராதிதத்வாச் |
சௌரே: கைலாஸயாத்ரா வ்ரதமுதி ததயாபீஷ்ட ஸந்தாந தாநாத்
நேத்ரேணஸ்வேநஸாகம்தசசதகமலைர்விஷ்ணுநாபூசிதத்வாத் |
தஸ்மைசக்ரப்ரதாநாமபிச்பசுபதிஸ்ஸர்வதேவப்ரக்ருஷ்ட: |

**சிவானந்த லகரி.**

அங்கோலம்நிஜபீசஸந்ததிரயஸ்காந்தோபலம்சூசிகா
ஸாத்வீநைசவிபும்லதாக்ஷிதிருகம் ஸிந்துஸ்ஸரித்வல்லபம்
பிராப்நோதீஹயதா ததாபசுபதே | பாதார விந்தத்வயம்சேதோவ்ருத்
திருபேத்யதிஷ்டதிஸதாஸாபக்திரித்யுச்சதே |

**விநாயக சுலோகம்.**

விநாயகோ விக்நராஜோ - கணநாதோ கஜானன: |
மஹோதரோ மஹாதேவோ - ஸ்நிக்தாஞ்சன ஸமத்யுதிஹி |

---

### உகூ.—சௌந்தரநாயகி வேதபாத ஸ்தோத்திரம்.

மகாமனோன்மணீ சக்தி - சிவசக்தி சிவங்கரி |
இச்சா சத்தி க்ரியாசத்தி - ஜ்ஞாநசத்தி சொரூபிணீ.

**அதர்வண வேதம்.**

[illegible]

**இருக்குவேதம் - பக்விநசசாகை.**

[illegible]

புரஸுந்தரீமேவை ப்ரத்யக்சிதி:। பாவாபாவ கலாவிநிர்முக்தா
சித்வித்யா த்விதீயப்ரஹ்மஸம்வித்தி: ஸச்சிதாநந்தலஹரீ மஹாத்ரிபுர
ஸுந்தரீ பஹிரந்தரமநுப்ரவிஸ்ய ஸ்வயமேகைவ விபாதி। யதஸ்தி
ஸந்மாத்ரம் யத்விபாதி சிந்மாத்ரம் யத்ப்ரியமாநந்தம் ததேதத்ஸர்வா
காரா மஹாத்ரிபுரஸுந்தரீ। த்வஞ்சாஹஞ்ச ஸர்வம் விஶ்வம் ஸர்வ
தேவதேதரத்ஸர்வம் மஹாத்ரிபுரஸுந்தரீ।

சதாக்ஷரீ பரமா வித்யா த்ரயீ மயீ சாஷ்டார்ண திரபுரா பரமேச்வரீ | ஆத்யாநிசத் வாரி பதாநி பரப்பிரஹ்ம விகாசிநி த்விதியாநி சக்த்யாக்கியாநி | த்ருதீயாநி சைவாநி தத்ர லோகா வேதாச் சாஸ்திராணி புராணாநி தர்மாணி சௌந்தர்யாம்பிகாய நமோஸ்து. |

சைஷா பராசக்திஃ | சைஷா சாம்பவீ வித்யா | காதி வித்யேதிவா ஹாதி வித்யேதிவாசாதி வித்யேதிவா ரகஸ்ய மோமோம் வாசி ப்ரதிஷ்டா | சைவ புர த்ரயம் சரீரத்ரயம் வியாப்ய பகிரந்தர வபாஸயந்தீ தேசகால வஸ்த்வம் தரா ஸங்காம் மகா த்ரபுர சுந்தரீவை ப்ரத்யக்சிதிஃ | பாவா பாவ களா விநிர்முக்தா சித்வித்யா த்விதீயப்ரஹ்ம ஸம்வித்திஃ சச்சிதானந்த லகரீ மகாதிரபுர சுந்தரீ பகிரந்தர மநுப்பிரவிஸ்யஸ் வயமே கைக விபாதி | யதஸ்தி ஸன்மாத்ரம் யத் வியாதி சின்மாதரம் யத் பிரிய மாநந்தம் ததே தத்ஸர்வாகாரா மகாதிரபுர சுந்தரீ | த்வம் சாசம் ஸர்வம் விச்வம் ஸர்வ தேவதே தரத் ஸர்வம் மஹா திரபுரசுந்தரீ |

### அதர்வணவேதம் - பர்சுபதப் பிரஹ்ம உபநிடதம்.

ஶிவோ ரக்ஷஸ்ஸர்வ ஸாயாரண்வஸாரஶிவ: ஸத்யாத்மா
நாம ரூப: பஶுபதி: கர்தா। ரக்ஷோயாமஶிவ:।
ஶம்ப ஸாயம்யாம:। பரம ஹம்ஸோத்வர்யு:।
பரமாத்மா தேவதா பஶுபதி:। ப்ரஹ்மோபநிஷதோ ப்ரஹ்மா।

### சுப்பிரமணிய சுலோகம்.

ஸ்சந்தோ குஹ ஷண்முகச்ச பாலநேத்ர சுதப்ரபுஃ |
பிங்கள க்ருத்திகாசூனு சிகிவாகோ த்வி ஷட்புஜஃ |

—oo:o:oo—

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

### ௩௦.—திருக்கருவூர்த் திருவானிலைத் தேவாரப்பதிகம்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொண்டெ லாமலர் தூவி யேத்தநஞ் - சுண்ட லாருயி ராய தன்மையர்
கண்ட னார்கரு வூரு ளானிலை - யண்ட னாரரு ளீயு மன்பரே. (௧)

(௧) தொண்டு = அடியவர். அதனை "குடிமையாண்மை" என்னுந் தொல் காப்பிய விதியானமைக்க. அலார் = (கண்டம்) கறுத்தவர்; அல் = கருமை,

நீதி யார்நினைந் தாய நான்மறை - யோதி யாரொடுங் கூட வார்குழைக்
காதி ஞர்கரு வூரு ளானிலை - யாதி யாரடி யார்த மன்பரே. (உ)

விண்ணு லாமதி சூடி வேதமே - பண்ணு ளார்பர மாய பண்பினர்
கண்ணு ளார்கரு வூரு ளானிலை - யண்ண லாரடி யார்க்கு நல்லரே. (ந)

மூடியர் மும்மத யானை யீருரி - பொடியர் பூங்கணை வேளைச் செற்றவர்
கடியுளார் கரு வூரு ளானிலை - யடிகள் யாவையு மாய வீசரே. (ச)

பங்க யம்மலர்ப் பாதர் பாதியோர் - மங்கை யர்மணி நீல கண்டர்வான்
கங்கை யார்கரு வூருளா னிலை - யங்கை யாடர வத்தெம் மண்ணலே. (ரு)

தேவர் திங்களும் பாம்புஞ் சென்னியின் - மேவர் மும்மதி லெய்த வில்லியர்
காவ லர்கரு வூரு ளானிலை - மூவ ராகிய மொய்ம்ப ரல்லரே. (சு)

பண்ணி ஞர்படி யேற்றர் நீற்றர்மெய்ப்-பெண்ணி ஞர்பிறை தாங்கு நெற்றியார்
கண்ணி ஞர்கரு வூரு ளானிலை - நண்ணி ஞர்நமை யாளு நாதரே. (எ)

கடுத்த வாளரக் கன்கயி லையை - யெடுத்த வன்றலை தோளுந் தாளிரு
லடர்த்த வன்கரு வூரு ளானிலை - கொடுத்த வன்னருள் கூத்த னல்லனே. ()

உழுது மாநிலத் தேன மாகிமா - ரெழுது மாமல ரோனுங் காண்கிலார்
கழுதி ஞன்கரு வூரு ளானிலை - முழுது மாகிய மூர்த்தி பாதமே. (கூ)

புத்தர் புன்சம ணாதர் பொய்யுரைப் - பித்தர் பேசிய பேச்சை விட்டுமெய்ப்
பத்தர் சேர்கரு வூரு ளானிலை - யத்தர் பாதம டைந்து வாழ்மினே. (க0)

கந்த மார்பொழிற் காழி ஞானசம் - பந்தன் சேர்கரு வூரு ளானிலை
யெந்தை யைச்சொன்ன பத்தும் வல்லவர் - சிந்தை யிற்றுய ராய தீர்வரே.()

திருச்சிற்றம்பலம்.

---

கண்டனுர்=கற்கண்டினையொத்தவர். ஆனிலை=(காமதேனுவாகிய) பசுவினாற் பூசிக்கப்பட்ட கோயில். (ச) மும்மதம்=கன்னமதம், கரமதம், பீசமதம். பொடியர்=விபூதியணிந்தவர். (சு) தேவர்=பிரகாசமுடையவர், மகிழ்ச்சி யுடையவர். திவ் = பிரகாசம், மகிழ்ச்சி. வில்லியர் = (மேருமலையாகிய) வில்லையுடையவர். மூவர் = மும்மூர்த்திகள். (எ) படி எற்றர் = எறியிருத் தலையுடைய இடபத்தினர். நெற்றியார் கண்ணினர்=நெற்றிக்கண்ணினர். (கூ) மால்=விட்டுணு. கழுதினன்=பேயோடாடி. (அ) அரக்கன்=இரா வணன். தோளும் என்றதன்க ணும்மையைத் தலையென்பதன்கணுங் கூட்டுக. தாள் - ஆகுபெயராய்ப் பெருவிரலை யுணர்த்திற்று. அருள் கொடுத்த வன்=இராவணற்கு மூன்றரைக்கோடி யாயுளும் வாளுந் தேருங் கொடுத் தவன்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

## ௩௧.—*பசுபதித் திருவிருத்தம்.

சாம்பலைப் பூசித் தரையிற் புரண்டுநின் றாள்பரவி
யேம்பலிப் பார்கட் கிரங்குகண் டாயிருங் கங்கையென்னுங்
காம்பலைக் கும்பணைத் தோளி கதிர்ப்பூண் வனமுலைமேற்
பாம்பலைக் குஞ்சடை யாயெம்மை யாளும் பசுபதியே. (௧)

உடம்பைத் தொலைவித் துன்பாதந் தலைவைத்த வுத்தமர்க
ளிடும்பைப் படாமை யிரங்குகண் டாயிரு ளோடச்செந்தீ
யடும்பொத் தனையவ ழன்மழு வாவழ லேயுமிழும்
படம்பொத் தரவரை யாயெம்மை யாளும் பசுபதியே. (௨)

தாரித் திரந்தவி ராவடி யார்தடு மாற்றமென்னு
மூரித் திரைப்பௌவ நீக்குகண் டாய்முன்னை நாளொருகால்
வேரித்தண் பூஞ்சுட ராங்கணை வேள்வெந்து வீழச்செந்தீ
பாரித்த கண்ணுடை யாயெம்மை யாளும் பசுபதியே. (௩

ஒருவரைத் தஞ்சமென் றெண்ணாதுன் பாத மிறைஞ்சுகின்றா
ரருவினைச் சுற்ற மகல்விகண் டாயண்ட மேயணவும்
பெருவரைக் குன்றம் பிளிறப் பிளந்துவேய்த் தோளியஞ்சப்
பருவரைத் தோலுரித் தாயெம்மை யாளும் பசுபதியே. (௪)

இடுக்கொன்று மின்றி யெஞ்சாமை யுன்பாத மிறைஞ்சுகின்றார்க்
கடர்க்கின்ற நோயை விலக்குகண் டாயண்ட மெண்டிசையுஞ்
சுடர்த்திங்கள் சூடிச் சுழல்கங்கை யோடுஞ் சுரும்புதன்றிப்
படர்க்கொண்ட செஞ்சடை யாயெம்மை யாளும் பசுபதியே. (௫)

---

* இத்திருவிருத்தம் பொதுவாகத் திருவாய்மலர்ந்தருளப்படினும், இத் தலக்கடவுளார் தந் திருநாமம் மகுடமாப்பெய்து அருளப்பட்டமையாற் பாரா யணஞ் செய்வார்க் குபகாரமாதனோக்கிப் பதிப்பிக்கப்பட்டது. திருஞானசம் பந்தசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய "திருவாவூர்ப் பசுபதீச்சுரம்" என்னுந் திருப்பதிகத்தை யித்தலப் பதிகமோவென்று சிலர் ஐயுறுவர். இத்தலம்போற் பசுக்களாற் பூசிக்கப்பட்டு, தலம் - ஆவூர் எனவும், கோயில்-பசுபதீச்சுரம் என வும், சுவாமி - பசுபதீச்சுரர் எனவும், தீர்த்தம்-பிரமதீர்த்த மெனவும் அதற்கு மிருப்பினும் வேறென்று கொள்க. திரு ஆவூர் என்னும் அத்தலம் சோழநாட் டிலே கும்பகோணத்தையடுத்த பட்டீச்சுரத்திற்குத் தென்மேற்கே நாலரை மைல் தூரத்துள்ளதென்று அறிக. ஆங்குள்ள அம்மையார் திருநாமம் மங் களநாயகி. கருவூர்த் திருவானிலையை வேறு பிரித்தற்கன்றே " ஆவூர்ப் பசுபதியீச்சுரம் பாடுநாவே" என்றார் சீகாழித் துரையாரும்.

அடலைக் கடல்கழி வானின் னடியிணை யேயடைந்தார்
நடலைப் படாமை விலக்குகண் டாய்நறுங் கொன்றைதிங்கள்
சுடலைப் பொடிச்சுண்ண மாசுணஞ் சூளா மணிகிடந்து
படரச் சுடர்மகு டாவெம்மை யாளும் பசுபதியே. (௬)

துறவித் தொழிலே புரிந்துன் சுரும்படி யேதொழுவார்
மறவித் தொழிலது மாற்றுகண் டாய்மதின் மூன்றுடைய
வறவைத் தொழில்புரிந் தந்தரத் தேசெல்லு மந்திரத்தேர்ப்
பறவைப் புரமெரித் தாயெம்மை யாளும் பசுபதியே. (எ, அ, ௯)

சித்தத் திருகிச் சிவனெம்பி ரானென்று சிந்தையுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின் றார்பிணி தீர்த்தருளாய்
மத்தத் தரக்க னிருபது தோளு முடியுமெல்லாம்
பத்துற் றுறநெரித் தாயெம்மை யாளும் பசுபதியே. (௧0)

---

## ௯௨.—திருவாசகம்.

### திருப்புலம்பல் - சிவானந்த முதிர்வு.

சடையானே தழலாடி தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையா யடியேனு
னுடையானே யுனையல்லா துறுதுணைமற் றறியேனே.

---

## ௯௩.—கருவூர்த்தேவர் - திருவிசைப்பா.

புவனநா யகனே யகவுயிர்க் கமுதே
பூரணா வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதி பன்னகா பரணா
வவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியே
னகத்திலு முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலு மமர்ந்தாய்
தனியனேன் றனிமைநீங் குதற்கே.

---

## ௯௪.—பெரியபுராணத் துதி.

கரியானையினீருரியாய்சிவதா - வெளியார்வலியாமிறைவாசிவதா
வளியாரடியாரறிவேசிவதா - தெளிவாரமுதேசிவதாசிவதா.

ஆறும்மதியும்மணியுஞ்சடைமே - லேறும்மலராக்கரிசிந்துவதே
வேறுங்கினைவார்புரம்வெந்தவியச் - சீறுஞ்சிலையாய்சிவதாசிவதா.

தஞ்சேசரணம்புகுதுந்தமியோர் - நெஞ்சேய்துயரங்கெடநேர்தொடரு
மஞ்சேயெனவீழ்மறலிக்கிறைநீள் - செஞ்சேவடியாய்சிவதாசிவதா. (௩)

நெடியோனறியாநெறியாரறியும் - படியாலடிமைப்பணிசெய்தொழுகும்
அடியார்களில்யானுராவணவார் - முடியாமுதலாரெனவேமொழிய. (௪)

---

## ௩௫. திருத்தொண்டத் தொகை.

### எறிபத்தநாயனர்.

இலைமலிந்தவேனம்பியெறிபத்தற்கடியே
னேனாதிநாதன்றனடியார்க்குமடியேன்
கலைமலிந்தசீர்நம்பிகண்ணப்பற்கடியேன்
கடவூரிற்கலயன்றனடியார்க்குமடியேன்
மலைமலிந்ததோள்வள்ளன்மானக்கஞ்சாற
னெஞ்சாதவாட்டாயனடியார்க்குமடியே
னலைமலிந்தபுனன்மங்கையானயற்கடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே.

---

## ௩௬. திருத்தொண்டர் திருவந்தாதி.

### எறிபத்த நாயனர்.

ஊர்மதின்மூன்றட்டவுத்தமர்க்கென்றோருயர்தவத்தோன்
றார்மலர்கொய்யாவருபவன்றண்டின்மலர்பறித்த
வூர்மலைமேற்கொளும்பாகருடறுணியாக்குமவ
னேர்மலிமாமதில்சூழ்கருவூரிலெறிபத்தனே.

### புகழ்ச்சோழ நாயனர்.

புலமன்னியமன்னைச்சிங்களநாடுபொடிபடுத்த
குலமன்னியபுகழ்க்கோகனநாதன்குலமுதலோ
னலமன்னியபுகழ்ச்சோழனதென்பர்நகுசுடர்வாள்
வலமன்னியவெறிபத்தனுக்கீந்ததொர்வண்புகழே.

---

## ௩௭. திருத்தொண்டர் புராணசாரம்.

### எறிபத்தநாயனர் புரரணசாரம்.

திருமருவுகருவூரானிலையார்சாத்துஞ்
சிவகாமியார்மலரைச்சிந்தயானை
யரநெறியோரெறிபத்தர்பாகரோடு
மறவெறியவென்னுயிருமகற்றீரென்று

புரவலனுர்கொடுத்தபடையன்பால்வாங்கிப்
புரிந்தரிவான்புகவெழுந்தபுனிதவாக்காற்
சரியினுடன்விழுந்தாருமெழுந்தார்தாமுங்
கணநாதரதுகாவல்கைக்கொண்டாரே.

**புகழ்ச்சோழநாயனுர்.**

பொழின்மருவுங்கருவூர்வாழ்புகழார்சோழர்
போதகம்போலென்னுயிரும்போக்குமென்றே
யழலவிர்வாள்கொடுத்தபிரானதிகமான்மே
லடர்ந்தபெரும்படையேவவவர்கொண்டேய்ந்த
தழல்விழிகொடலைகாண்பார்கண்டதோர்புன்
சடைத்தலையைமுடித்தலையாற்சூழ்ந்துவாங்கிக்
கீழல்பரவியதுசிரத்தினேந்திவாய்ந்த
கனன்மூழ்கியிறைவனடிகைக்கொண்டாரே.

---

## ௩௮. கருவூர்ப்புராண தோத்திரம்.

### விநாயகக் கடவுள்.

பாயலுந் திருவு முந்திப் பாலனுந் துயிலுஞ் செங்கண்
மாயனும் வேறு வேறு திசைதிசை மயங்கி மாழ்கத்
தூயபாற் கடலை வாங்கித் துதிக்கையாற் சிதறுந் தெய்வ
நாயகற் கன்பு செய்து நான்றமிழ் நடத்த லுற்றேன். (க)

அஞ்சுளா ரணியெழுத்தொ ராறுளார் சடையிற் கண்ட
நஞ்சுளா ரணிய பாக நயந்துளார் ஞானம் பூத்த
நெஞ்சுளா ரணிபயந்த நிறைமதக் கவுட்டு நால்வாய்
வஞ்சுளா ரணிய மேவுங் களிற்றினை வழுத்தல் செய்வாம். (௨)

### பசுபதீசுரர்.

மேவருதத் துவசித்தி யடைந்துதத்த மெய்யுணர்ந்து விமல ஞான
மூவகையா ருயிர்விளங்கி முதிருமன்பால் வழங்குமொரு முத்தி வாழ்வைப்
பாவனைக டந்துநின்ற பரஞ்சுடரைப் பசுபதிநா யகனை முன்னைத்
தேவர்கடே வைக்கருவூர்ச் சிவக்கொழுந்தை யிதயமலர் திகழவைப்பாம். (க)

வைத்த மனைவிய ரொக்கன் மரபினர் மக்க டுணையினர் பக்கலே
மெத்த வொழுகிய வித்தைவழியில் விருப்ப நனியுறு சித்தமே
பத்தர் பரவுக ருப்பபுரிவரு பச்சை வடிவொரு பக்கனர்
நித்தர் பசுபதி யத்தர் பதமலர் நித்த நினைபவர் முத்தியே.

மண்ணி னுளனிடை யெண்ண வரியன வண்மை யுளபொருண் மன்னு
யுண்மை யொளிதர வுண்மை யருள்பெறு முண்மை யதுவரு முண்மை
கண்ணி தொடுகணை யண்ண லுயிர்கவர் கண்ண ரழல்புரை வண்ண
விண்ணி னுயரிய தண்ண மதிநிகர் வெண்ணெய் வரைதனை நண்ணு

கமழ்சோலை நீல மலர்வாவி மேவு கருவூர ராதி புரனுர்
நமையாளு நாதர் மறையோது பாதர் நவநீத சீத வரையா
ருமைநேசர் தேசு பொலிபூசை யாசை யுறையாது தேச முழல்வீர்
யமபாச மோச மலநாச மேனி யுறவீசி லேது புகலே. (௪)

உருவே யருவே யொளியே சரணம் முணர்வே யுணரா ருணர்வே சரணங்
குருவாய் வெளியே வருவாய் சரணங் கொடுமால் விடமார் மிடறு சரணங்
கருமா கரிவீ ழுரியாய் சரணங் கருவே ரறவே வருவாய் சரணந்
திருமா லறியா விறையே சரணந் திருவா னிலையாய் சரணஞ் சரணம். (௫)

பவளா சலமே னியனே சரணம் படிநீ ரெரிகால் வெளியே சரணந்
துவளா வொளிர்மா மணியே சரணஞ் சுகஞா னபரா பரனே சரணம்
நவநீ தசிலா விறையே சரணந் நடுமே லொடுகீ ழுமிலாய் சரணஞ்
சிவனே சிவதே சிகனே சரணந் திருவா னிலையாய் சரணஞ் சரணம். (௬)

முடிசூட்டுசெய்யசடைவீட்டில்வெள்ளமுசகீட்டமெள்ளநகுவார்
வடிவேற்றதையலொருகூற்றினல்லமகிழ்வாழ்க்கைசெய்யமகிழ்வார்
கொடியேற்றுவெள்ளைவிடையேற்றர்சைவர்குடியேற்றமுள்ளகருவூ
ரடியார்க்குநல்லரடியேத்தவல்லரருள்வாய்த்தசெல்வரவரே. (௭)

நவமலிபோதாகுழையணிகாதாநடனவிநோதாமலர்மீதா
னிலகெழின்மாதார்மனைதனிலேதானிரவொருதூதாயிசைபாதா
கலைதெரிவேதாகமநவில்கீதாகரபுரநாதாகணநாதா
வுலகினுண்மாதாவயினிடைபோதாதுனதருளேதாபரநீதா. (௮)

போரானையுரியுரிவைபோர்த்தானைப்பூங்கடுக்கைத்
தாரானைவீட்டின்பந்தருவானைப்பொருவில்கரு
வூரானைமழவிடையொன்றூர்ந்தானையுருள்பெருந்தேர்ப்
பாரானைமதன்வீழப்பார்த்தானைப்பணிகுவாம். (௯)

பரசுதரர்கருவூரர்வேளைக்காய்ந்தார்பஃறலைராவணன்வலிதாளுங்கிரிந்கண்டா, ரிரவிகூ ரெயிறுகுத்தார் மதியைத் தேய்த்தா ரெரிகையறுத் தார்கூற்றை தைத்தார்காலா, னரவரியைச்சரபவுருவெடுத்துமாய்த்தார்நான்முகன்சென் ரியைக்கொய்துகபாலமேற்று, ரரணமூன்றினையுமிழநகையால்வென்றுரா றுமருளீயுமன்பராமே. (௧௦)

க்கொடுங்குடுமிப்படையின்மேற்றுளபமுதிர்பசும்புயல்கிடந்ததுவுங்
கமலத்திற்கபாலமாய்வேதங்கழறுவாய்ச்சிரமிருந்ததுவுஞ்
தவார்கண்டுந்தொக்கறிவிலர்போற்றமிழ்வளர்வஞ்சியெம்மடிகட்
க்கவோதுவரோதாதுணர்வோர்க்காளாகுவமுயர்கதியுறவே. (௧௧)

னெண்ணுதிபுரங்கரபுரம்பாற்கரபுரம்வீரசோழபுரம்
ளாரணியம்வஞ்சிதாயூர்சண்மங்கலகேத்திரங்கருவூர்
றுங்கருப்பபுரிமுதனுமம்விளங்குதொல்பதியில்வீற்றிருக்குஞ்
டர்ப்பொருளினிருபதமேனைத்தேவர்பொன்முடிக்கணிகலனே. (௧௨)

மாநிலையேமறையோனிலையேமகவானிலையேமுதலாம்
வானிலையானவைதாநிலையாவெனமற்றவைசற்றுமெண்ணர்
மேனிலைதேர்தருஞானியருள்ளம்விரும்புமரும்பொருடா
ணுனிலைமேவியபசுபதிநாயகரடியரடிப்பொடியே. (கங)

வேற்றுமலரம்பிறைமுடியும்படிகாய்விழியம்பிறைமுடியுந்
தோற்றும்வரியகருவூருஞ்சுடர்ப்பூஞ்சோலைக்கருவூரும்
போற்றும்பீதாம்பரவிடையுமுடையோன்புலவர்பாவிடையு
மேற்றுமிணைத்தாண்மலர்ப்போதுமிருக்குமுளப்போதெப்போதும். (கச)

தாவுமெரிபுரைமேனியலதுகாணுக்கண்ணுந்தனதுகீர்த்தி
மூவர்முதலியபாடலலதுமொழியாவாயுமுருகுதூற்றும்
பூவலர்தூஉய்ச்சிவபூசையலதுபுரியாக்கரமும்புலவர்போற்றுஞ்
சேவடியல்லாதுவணங்காமுடியுந்தந்தவனைச்சிந்தைசெய்வாம். (கரு)

சௌந்தரநாயகி யம்மையார்.

நதிகாட்டும்புனற்கழனிவளங்காட்டவறங்காட்டுநலஞ்சேர்வஞ்சிப்
பதிகாட்டும்பசுபதியோரிடங்காட்டவலங்காட்டும்பரையைமேலாங்
கதிகாட்டுங்கருங்குயிலையருள்காட்டுங்கயலிரண்டுகாட்டுந்தூய
மதிகாட்டுமடமயிலைவடிவுடையநாயகியைவணங்கிவாழ்வாம். (கசு)

எறிபத்த நாயனர்.

மறிவைத்தகரனுக்கன்பர்கொடுவருமலரைச்சிந்தும்
வெறிவைத்தகளிறும்பாகும்வீடவெங்கணிச்சிவீசிச்
செறிபத்தரிடையூறீர்ந்துசிவநெறிவழாதுசெய்யு
மெறிபத்தரிணைத்தாளுள்ளத்திருத்தியெம்மிடர்கடீர்வாம். (கஎ)

புகழ்ச்சோழ நாயனர்.

அளவிலாநிலைநாதற்குச்சேதிமமாதியாற்றிக்
களமதினேராதீர்ந்தசடைத்தலைகாண்டலும்பொற்
கிளர்முடிமிசைபரித்துக்கேழ்கிளரெரியின்மூழ்கும்
வளர்புகழ்ச்சோழனர்தம்மலரடிமுடிமேல்வைப்பாம். (கஅ

கருவூர்த்தேவர்.

ஊர்ந்தனங்கருவூரன்னையுதரத்திலினியூராமை
சார்ந்தனங்கருவூரென்னத்தவந்திளைத்தாற்றித்தக்கோ
ரார்ந்தநங்கருவூரெந்தையாநிலையடிகள்பாதஞ்
சேர்ந்தநங்கருவூர்த்தேவர்சேவடிசென்னிசேர்ப்பாம். (

அகம்படிமைத் தொண்டர்.

பிணித்தபூங்கொடிசூழ்வஞ்சிப்பிஞ்ஞகனினிதுவைகு
மணித்தகடிழைத்தசோதிவயங்குபொற்சினகரத்தி
னணித்தனபதிபோல்வாழ்க்கையடைந்தகம்படிமையாகப்
பணித்தகுற்றேவலாற்றும்பரிசனர்பதங்கள்போற்றி.

———

## ௩௯. இத்தலத்தின் மகோற்சவ விவரம்.

பிரமன்முதலிய தேவர்கள் பங்குனி மாதத்து உத்தர நட்சத்திரப் பௌர்ணமிதிதியன்று இரத மகோற்சவங் கொண்டாடிக் கல்யாணசுந்தர விரதமும் அடிட்டித்துப் பேறுபெற்றார்களென்று பிரமகைவர்த்த மகாபுராணம், நாரசிங்க புராணம், கருவூர்த் தலபுராணம் என்பவற்றின்கண் கூறப் படலால் இரதமகோற்சவம் ஏழாவது நாளாகிய அத்தினத்தில் இப்போதும் நடந்துவருகிறது. அதுபற்றியே பங்குனி மாதம் பூர்வபக்கத்து நவமியே துவசாரோகண தினமாகின்றது. உற்சவம் நித்தியோற்சவம், நைமித்தி கோற்சவம், காமியோற்சவம் என மூவகைப்படும். இவற்றுளீண்டுச்சொல் வது வருடந்தோறுஞ் செய்யப்படுவதான நைமித்திகோற்சவமேயாம். அது அநுஞ்ஞை, கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப் பணம், விருஷாதிவாசம், இரட்சாபந்தனம், பேரீதாடனம், தம்பப்பிரதிட் டை, துவசப்பிரதிட்டை, திரிசூலப்பிரதிட்டை, சமஸ்த தேவதாவாகனம், அலங்காரசூரணிகை, கணபதிதாளம், இடபதாளம், தானவகை, துவசா ரோகணம், அஸ்திரதேவதாவாகனம், மகாசீர்வாதம், பலிபீடப் பிரதிட்டை, சந்தியாவாகனம், அஸ்திரயாகம், யாகாரம்பம், உற்சவம், திருக்கல்யாணம், வசந்தோற்சவம், தைலாப்பியங்கம், கிருஷ்ணகந்தோற்சவம், மிருகயாத்தி ரோற்சவம், கந்தோற்சவ சகித ரதோற்சவம், சூர்ணோற்சவம், தீர்த்தோற் சவம், யாகோத்வாசனம், யாக கும்பாபிஷேகம், துவசாவரோகணம், சந்தி விசர்ச்சனம், மௌனோற்சவம், சண்டேசோற்சவம் முதலாய பலகிரியாங்கங் களையுடைத்து. இதனைச் சாம்பவிதீக்கையென்று சிவாகமங்கள் கூறுகின் றன. இத்திருவிழாவாற் பஞ்சகிருத்தியம் பெறப்படும். அவ்வுற்சவ விவரங் களையீண்டுத் தருதும்.

| நாள். | பகல். | இரவு. |
|---|---|---|
| க. | வாஸ்துசாந்தி. | ,, |
| உ. | துவசாரோகணம். | ,, |
| ௩. | பல்லக்குச்சேவை. | நந்திவாகனம். |
| ௪. | ,, | இடபவாகனசேவை. |
| ௫. | ,, | கைலாயபர்வதம். |
| ௬. | ,, | யானைவாகனம். |
| எ. | மகா இரத சேவைக் காட்சி. | |
| அ. | பல்லக்குச்சேவை. | குதிரைவாகனம். |
| ௯. | ,, | புஷ்பரதசேவை. |
| ௧0. | ,, | அவரோகணம், இடபவாகனசேவை. |
| ௧௧. | ,, | புஷ்பப்பல்லக்கு. |
| ௧௨. | சுத்தபுண்ணியாவாசனம் (ஸ்தபனம்.) | |

## ௪௦. திருக்கோயிலினுந் திருவீதியினுஞ் செய்யத்தகாத குற்றங்கள்.

ஸ்நானஞ் செய்யாது போதல், விபூதி ருத்திராக்கந் தரியாது போதல், உலராத வேட்டி தரித்துச் செல்லுதல், கால்கழுவாது போதல், ஆசௌசத்துடனே போதல், தலையில் வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல், சட்டை யிட்டுக் கொள்ளுதல், போர்த்துக் கொள்ளுதல், உத்தரீய மிட்டுக் கொள்ளுதல், செருப்பு மிதியடி யிட்டுக்கொள்ளுதல், வாகனமேறிச் செல்லுதல், குடைபிடித்துக் கொள்ளுதல், வெற்றிலை பாக்கு உண்டல், எச்சி லுமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்குநீர் சிந்துதல், மயிர் கோதி முடித்தல், சூதாடுதல், சிரித்தல், சண்டையிடுதல், வீண்வார்த்தை பேசல், பொய் சொல்லுதல், காமப்பற்று வைத்தல், ஆடம்பரத்துடன் போதல், தம்மைப் பிறர் மதிக்கும்படி அதிகாரஞ் செலுத்தப் போதல், பணிவின்மை, கொடுஞ்சொற் சொல்லுதல், வணங்கப் போவாரைத் தடுத்தல், வணக்கம் புரிவதற்குப் பணம் வாங்கிக்கொண்டு உள்ளேவிடல், சூதாடுதல், காலைநீட்டிக்கொண்டு இருத்தல், ஆசனத்து இருத்தல், நித்திரை செய்தல், சுவாமிக்கும் பலிபீடத்திற்குங் குறுக்கே போதல்,

சுவாமிக்குக் காலை நீட்டிக்கொண்டு வணங்குதல், ஒருமுறை இருமுறை விழுந்து வணங்குதல், விழுந்து வணங்காமற் போதல், அஞ்சலி செய்யாமை, பிரதக்ஷிணஞ் செய்யாமை நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், புசிக்கத்தகாத சண்டாளர், பதிதர், தீக்கையில்லாதார் முதலாயினோர்க்கு நிருமாலியங் கொடுத்தல், தூபி, துசத்தம்பம், பலிபீடம், விக்கிரகம் என்னு மிவைகளின் நிழலை மிதித்துப் போதல், விக்கிரகங்களைத் தீண்டுதல், தீர்த்தம் குளங் கிணறுகளை யழுக்காக்குதல், மூர்த்தங்களைக் கல்லென்றுஞ் செம்பென்றும் நினைத்தல், சொல்லுதல், சிவத்திரவியங்களைக் கவருதல், கவர்வதைக்கண்டு பேசாமலிருத்தல், தத்தம் வருணத்திற்கு வகுத்த எல்லை கடந்து போதல், அபிடேக அலங்கார காலங்களிற் றரிசித்தல், தேவாரம், திருவாசகம் திருவிசைப்பா முதலாகப் பெரியபுராண மிறுதியாகவுள்ள பன்னிரு திருமுறைகளாகிய திருவருட்பாக்களை யன்றி, அவற்றிற்கு விரோதமானவும் பசுத்துவமுடையாராற் செய்யப்பட்டவுமான பாடல்களைப் படித்தல் முதல[illegible]யின. இவையிற்றை "எச்சில்சான்றுமிழ்தல்" எனவரூஉங் கடம்பவனபுராணச் செய்யுள்களானுமுணர்க.

இந்தக் குற்றங்களைச் செய்தவர்கள் பெரும்பாவிகளாய் நரகத்திற் பல[illegible]லங்கிடந்து புன்பிறப்புகளை யடைந்து வருந்துவா ரென்று வேதசிவாகமா[illegible]ளாகிய அருணூல்கள் கூறுகின்றன. குளிக்கப்போய்ச் சேறுபூசிக்கொள்வ[illegible] போல, சுவாமி தரிசனமாகிய புண்ணியஞ் சம்பாதிக்கப் போய் வீணே பா[illegible]தைத் தேடிக்கொள்வது அறிவாகாது. ஆகலான் யாவரும் இக்குற்றங்க[illegible] விடுத்து ஸ்ரீ சௌந்தரநாயகிசமேத பசுபதீச்சுரப் பெருமானை வழிபட்டு, அ[illegible] திருவருளையடைந்து உய்வார்களாக.

———

## ௪௧. தீர்த்தங்களிற் செய்யத் தகாதன.

ஆம்பிரவதி, தாடகைதீர்த்தம், முருகதீர்த்தம், பிரமதீர்த்தம் முதலிய தீர்த்தங்களிலே விதிப்படி யாடுதல் வேண்டும். அங்ஙன மித்தீர்த்தங்களைத் தலைமேற் றெளிக்கினும் மகாபாதகம், அதிபாதகம், உபபாதகங்க ளெல்லாம் நீங்கும். அத்தகைய தீர்த்தங்களிலே மலசலங் கழித்தல், சௌசஞ் செய்தல், தந்தசுத்தி செய்து உமிழ்தல், வஸ்திரமின்றி நீராடல், நீர் கலங்க மூழ்குதல், சனனசௌச மரணசௌசத்துடன் றோய்தல், பூப்புப் பெண்கள் தோய்தல், வத்திரந் தோய்த்தல், விளையாடல், தாழ்ந்த சாதியார் ஆடல் முதலியன செய்தலாகா. இவைசெய்தோர் இரௌரவம் மகாரௌரவ முதலிய கொடிய நரகங்களில் வீழ்ந்து வருந்திப் புன்பிறப்புக்க ளெடுத்துழல்வர். செய்வனவெல்லாங் கரையிற் செய்துகொள்ளக்கடவர்.

---

## ௪௨. அடியார்கள் திருநட்சத்திரம்.

எறிபத்த நாயனார் - மாசிமாத அத்தநாள்.
புகழ்ச்சோழ நாயனார் - ஆடிமாதக் கார்த்திகைநாள்.
கருவூர்த்தேவர் - தைமாசப் பூசநாள்.

---

## ௪௩. மகா கும்பாபிடேகச் சிறப்பு.

ஆண்டு பராபவத்தி னனியிரு பத்தொன்ப
தீண்டு குருவாரம் பின்றிதியேழ் - காண்டகுநா
ளுத்தரட் டாதியரி லக்கினத்தி லொண்கருவூர்க்
கர்த்தன்கும் பாபிடே கம்.

கும்பாபிடேகத்திற்கும், கருவூர்க்கும், ஆம்பிரவதி யாற்றுக்கும்,
பசுபதீசப்பெருமானுக்கும், பிரமனுக்கும், திருமாலுக்கும்,
தமிழ்க்கும், ஆரியவேதத்திற்கும், தமிழ்வேதத்திற்கும்,
சமய குரவருக்குஞ் சிலேடை.

### பதின்பொருட் சிலேடை.

வாரம் வரலால் வருகுவனங் கோட்லாற்
சாரஞ் செறிதலாற் சார்கதியாற் - சீரகரு
வூரா றரனயன்மா லொண்டமிழ்வே தங்குரவர்
நேராங்கும் பாபிடேக நேர்.

கருவூர் மான்மியம் முற்றிற்று.

---

# இதன்கண் காட்டப்பட்ட நூல்களின் விவரம்.

## வடமொழி நூல்கள்.

இருக்கு வேதம்.
சுக்கில யசுர்வேதம்.
கிருஷ்ண யசுர்வேதம்.
சாம வேதம்.
அதர்வணவேதம்.
தைத்திரீயகம்.
யசுர்வேத கர்ப்பசாகை.
சாமவேத சாபால சாகை.
அதர்வணவேத நரசிம்ம தாபினி.
ஷை சரபசாகை.
ஷை பஸ்மசாபால சாகை.
ஷை அதர்வசிரோ சாகை.
ஷை பிருகச்சாபால சாகை.
ஸ்ரீருத்திரநமகம்.
பௌட்கராகமம்.
மதங்காகமம்.
விசுவசாரோத்தரம்
சுத்தாக்கியை.
பராக்கியை
கந்தகாலோத்தரம்.
சர்வஞானோத்தராகமம்.
சித்தாந்தபோதம்.
சித்தாந்தசம்போதி.
தந்திரசாரம்.
அம்பா ஸ்தவம்.
பிரமகைவர்த்த புராணம்.
பிரமாண்ட புராணம்.
நாரசிங்க புராணம்.
பவிடிய புராணம்.
வாயுசங்கிதை.
சிவரகசியம்.
அகத்திய பக்தவிலாசம்.
உபமன்னியு பக்தவிலாசம்.
பாணினி வியாகரணம்.
காசி கண்டம்.
சிவதத்துவ விவேகம்.
சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்.
சிவானந்தலகரி.
அமரநிகண்டு.

## தமிழ் நூல்கள்.

தேவாரத் திருவருட்பா.
திருவாசகத் திருவருட்பா.
திருவிசைப்பாத் திருவருட்பா.
திருவுந்தியார்.
பெரியபுராணத் திருவருட்பா.
திருத்தொண்டர் திருவந்தாதி
கந்த புராணம்.
திருத்தொண்டர் புராணசாரம்.
தொல்காப்பியம்.
பதிற்றுப்பத்து.
தகடூர்யாத்திரை.
அகநானூறு.
புறநானூறு.
பத்துப்பாட்டு.
கருவூர்ப் புராணம்.
புறப்பொருட் பன்னிருபடலம்.
கொங்குவேண்மாக்கதை.
புறப்பொருள் வெண்பாமாலை.
பழநித்தல புராணம்.
கடம்பவன புராணம்.
கொன்றைவேந்தன்.
உலக நீதி.

---

இந்நூல் ௬-ம் பக்கத்தில் [illegible] என்பதை [illegible] எனவும், [illegible] என்பதை [illegible] எனவும், [illegible] என்பதை [illegible] எனவும், திருத்தி வாசிக்க.

17650

சிவமயம்.

## இந்நூலாசிரியரால் இயற்றியும் பரிசோதித்தும் வெளியிடப்பட்ட நூல்கள்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| ௧. | கூர்மபுராண விருத்தியுரை ... ... ... | ௧ | ௧௨ | ௦ |
| ௨. | சிவராத்திரிபுராண விருத்தியுரை ... ... | ௪ | ௦ | ௦ |
| ௩. | நைடத விருத்தியுரை ... ... ... | ௨ | ௦ | ௦ |
| ௪. | சுப்பிரமணிய பராக்கிரமம் ... ... ... | ௧ | ௪ | ௦ |
| ௫. | பிரபுலிங்கலீலை அரும்பத வுரை ... ... | ௦ | ௮ | ௦ |
| ௬. | தமிழ்ப் பேரகராதி ... ... ... ... | ௩ | ௮ | ௦ |
| ௭. | சைவபூஷண சந்திரிகை ... ... ... | ௦ | ௮ | ௦ |
| ௮. | சைவசித்தாந்த சங்கிரகம் ... ... ... | ௦ | ௧௨ | ௦ |
| ௯. | சிவக்ஷேத்திராலயமகோற்சவ உண்மை விளக்கம் | ௦ | ௯ | ௦ |
| ௧௦. | ஏகாதசி புராண அரும்பத வுரை ... ... | ௦ | ௫ | ௦ |
| ௧௧. | மருட்பா மறுப்பு ... ... ... ... | ௦ | ௫ | ௦ |
| ௧௨. | புத்தமத கண்டனம் ... ... ... ... | ௦ | ௨ | ௦ |
| ௧௩. | அகத்தியர் தேவாரத்திரட்டு ... ... ... | ௪ | ௧௨ | ௦ |
| ௧௪. | சென்னைக் கந்தர் நவமணிமாலை ... ... | ௦ | ௦ | ௬ |
| ௧௫. | கதிர்காமக் கலம்பகம் ... ... ... | ௦ | ௩ | [illegible] |
| ௧௬. | திருஞான சம்பந்தநாயனார் புராண வசனம் ... | ௦ | ௦ | ௬ |
| ௧௭. | கந்தபுராண சாரச் செய்யுள் ... ... ... | ௦ | ௦ | ௬ |
| ௧௮. | போலியருட்பா மறுப்பு ... ... ... | ௦ | ௧ | ௬ |
| ௧௯. | பட்டினத்துப்பிள்ளையார் புராண வுரை ... | ௦ | ௧௨ | ௦ |
| ௨௦. | கருவூர் மான்மியம் ... ... ... ... | ௦ | ௪ | ௦ |

இப்புத்தகங்கள் எம்மிடத்தும், சென்னைக் குயப்பேட்டை வித்தியாரத்நாகர அச்சியந்திர சாலையிலும், யாழ்ப்பாணத்து மேலைப் புலோலிப் புதுச்சந்நிதிக் கந்தசுவாமிகோயிற் றருமகர்த்தா ஸ்ரீமத். க. நாகப்ப பிள்ளை அவர்கள் இடத்திலும் பெற்றுக்கொள்க.

இங்ஙனம்,

(யாழ்ப்பாணம்.) நா. கதிரைவேற் பிள்ளை,

கருவூர்

கோயம்பத்தூர் டிஸ்ட்.

சென்னை,
5-6-06.